# கவிதைச் சோலை

திருமதி.வி.பாக்கியநாதன் B.A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச்சோலை

MANN (EKOLI) MAGAZIN
V. Sivarajan
Am Winkelhävel 18a
47249 Duisburg
Germany

# I

திருமதி . வி. பாக்கியநாதன் பீ.ஏ

முதற்பதிப்பு ~ 1.11.1988

மறுபதிப்பு ~ 1.07.1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

வாழ்க்கை என்பது செம்மையாகச் செல்ல வேண்டியது மாத்திரமல்ல ; அது ஒரு நெறிமுறையானதாக அமையவேண்டும். அவ்வாறு அமைவதற்கு சமுதாயத்திற் காணப்படும் ஊழல்களும் வரட்டுக் கொள்கைகளும் அழிந்து ஒழிந்து போகவேண்டும். அப்போது தான் மனித இனம் விடுதலைபெற்று நெறிமுறையாக வாழமுடியும்.

கவிதைச்சோலையிலே சமூக அமைப்பில் ஆண்மையும் பெண்மையும் சமமாக வாழவேண்டும். அது தான் உலகம். அப்படி இருக்கும்போது பெண்மை ஏன் ஆண்மைக்கு அடிமையாக வேண்டும்? சீதனக்கொடுமை அழிய வேண்டும்; ஆண்கள் ஆண்மையுள்ளவர்களாக வாழ வேண்டுமானால் சீதனத்துக்கு அடிமைப் படாதவர்களாக வாழவேண்டும். அவனே இலட்சிய வாதி. ஈழநாட்டிற் தான் சீதனக் கொடுமை உள்ளதென்றால் மேற்கு நாட்டிலும் அதன் கொடுமை தாண்டவமாடுகின்றதே. இதை அழிப்பவர் எவரும் இல்லையா? என்ற கேள்விக் குறியை முன் வைத்து சீதனப்பேய் ஒழியவேண்டும் என்பதை முடிவற்ற புயல் விந்தைப்பிறவிகள் எத்தனையோ மாறுகின்றது போன்ற சில கவிதைகளின் மூலம் கவிஞர் தெளிவாகக் காட்டியுள்ளார்.

கவிதைச்சோலையின் இறுதிப்பகுதியில் இன்றைய காலகட்டத்தில் தமிழன் தனித்துவமாக வாழ்வதற்கு நாடில்லை.... ஒரு இடமும் இல்லை. நாம் அடிமைகளாக வாழக் கூடாது. அதை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து தாய்நாட்டையும் தாய் மொழியையும் போற்ற வேண்டும். அதுவே தமிழன் தன் நாட்டுக்கு ஆற்றுகின்ற செயலாக இருக்கவேண்டும் எனப் பல கவிதைகளிற் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியையின் கவித்திறமையால் ஒவ்வொரு கவிதையும் சுவைக்கச் சுவைக்கத் தேன் கொட்டுவது போல் இருக்கின்றன. இவரின் திறமை மேன்மேலும் ஓங்கவேண்டும் : இங்கு வாழ் தமிழர்கள் பல இடர்பாடுகள் மத்தியில் வாழ்கின்றனர். நிலையாக ஒரு இடத்தில் இருந்து கொண்டு நாம் சிந்திப்பதற்கோ செயற்படுத்துவதற்கோ முடியாத ஒரு சூழ்நிலையில் கவிதைத் தொகுப்பை வெளியிடுவது வரவேற்கக் கூடிய விடயமே.

கவிதைச்சோலை என்ற இக் கவிதைத் தொகுப்பில் பல சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ள ஆசிரியை திருமதி.விக்னா பாக்கியநாதன் அவர்களுக்கு தமிழ் மக்கள் கடமைப்பட்டவர்கள்.அது மட்டுமன்றி இவரிடமிருந்து இன்னும் பல கவிதை நூல்கள் ; இலக்கிய ஆக்கங்கள் வெளிவர வேண்டும் என்று தமிழுலகம் நாடி நிற்கின்றது.

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் நன்றே

- பாரதியார் -

முத்துச்சொக்கன்
B.Com ; B.Pill ( Hons) Dip . in Ed



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமதுரை

உங்கள் கைகளில் தவழ்ந்து மணம் பரப்பும் இக் கவிதைச்சோலை எமது முதற் கவிதைத் தொகுப்பு அல்லது கன்னிப் படைப்பு என்று கூறுவதில் மகிழ்வடைகிறோம். இங்கே இடம்பிடித்துள்ள பல கவிதைகள் பத்தாண்டுப் பராயத்தையும் சில கவிதைகள் பத்துநாட் பராயத்தையும் கொண்டவை.

1978ல் இலங்கைப் பல்கலைக் கழகம் - யாழ்ப்பாண வளாகத்தில் கல்வி கற்கும் காலங்களில் சமூகச்சீர்திருத்தம் ; சாதியொழிப்பு ; பெண்விடுதலை; போன்றவற்றை மையமாகக் கொண்டு கவிதைகள் பல எழுதினோம். பல்கலைக்கழக வாழ்க்கையில் நடைபெற்ற கவியரங்குகளில் இடம்பெற்ற கவிதைகளும் ; மற்றும்: புதிய உலகம் ;தமிழறிவு ; தினகரன் போன்ற பத்திரிகைகளுக்கு எழுதிய கவிதைகளும் ; வானொலியில் இடம் பெற்ற கவிதைகளும் ;ஜேர்மனிய வாழ்வில் இங்கு வெளியாகும் சஞ்சிகைகளுக்கு எழுதிய கவிதைகளும் இச்சோலையிலே பலவண்ண மலர்களாக மலர்ந்துள்ளன. இவற்றிலே சில கொத்துக் கொத்தாகவும் சில தனி மலர்களாகவும் அழகூட்டுகின்றன.

நாம் யாத்த கவிதைகள் யாவும் முற்றுமுழுக்க கவிதையிலக்கண வரம்புக்குட்பட்ட தென்று கூறவில்லை. ஆனால் கவிதை வரம்பை மீறாமல் எமது கருத்துக்களை கவிதை எனும் வாகனத்திலேற்றி உங்கள் முன் பவனி வர விட்டுள்ளோம்.நமது தாயகச் சுதந்திரம் வேண்டிப் போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் விடுதலையை மையமாகக் கொண்ட சில கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவிதைகளில் குறைகள் இருக்கலாம் ; நிறைகள் இருக்கலாம் ; அதைக் கண்டுபிடிக்கும் நீதிபதிகளாக நீங்கள் மாறி விமர்சியுங்கள்! இக்கவிதைகளில் எத்தனை கவிதைகள் நீண்டகாலம் வாழும் தகுதியுடையவை ? எத்தனை கவிதைகள் இக்காலத்துக்கு ஒவ்வாதவை?என்பதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும். இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்று கூறுவர் அறிஞர். அதற்கேற்ப இந்நூலில் இடம்பெற்ற கவிதைகளைக் கொண்டு ; கவிதை தோற்றம் பெற்ற காலச்சூழ்நிலைகளை இனங்காண முடியும்.

இக் கவிதைத் தொகுப்பைத் தொடர்ந்து இரண்டாவது கவிதைத் தொகுப்பும் வெளிவந்து ; தட்டச்சு

எழுத்து வாகனத்தில் நூலுருப்பெற்றுள்ளது. 1988ல் பல இடர்கள் மத்தியிலே ஜேர்மனியில் கையெழுத்துப் பிரதியாக வெளிவந்து ஒளியிழந்திருந்த " கவிதைச்சோலை " எனும் நூலை தற்கால வளர்ச்சிக்கேற்ற வண்ணம் கணனி மூலம் ஒளியூட்டும் அழகுதமிழ் எழுத்து வடிவத்தில் மறுபதிப்புச் செய்கின்றோம்.

" கவிதைச்சோலை " சிறப்பாக உருப்பெறுவதற்கு உதவியீந்த சகல அன்பு நெஞ்சங்களுக்கும் முகவுரை வழங்கி மெருகூட்டிய திரு.முத்துச்சொக்கன் (பாடசாலை முன்னாள் அதிபர்) அவர்களுக்கும் ; அச்சகப் பொறுப்பை ஏற்ற டோர்ட்மூண்ட் -கரிதாஸ் நிறுவனத்துக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1988 விக்னா பாக்கியநாதன்

ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினையொழிப்பாய்

விக்னந்தனை விலக்கும் விக்னேஸ்வரனை
வணங்கின் அமைதி தோன்றும்
முக்கண்ணனுக்கு மைந்தனாய் வந்தயிவன்
மகிமையை நினைந்தால் கிடைக்கும் இன்பம்
பக்தியுடன் இவன் பாதம் பணிந்திட்டால்
பற்றிய பிணிகள் நீங்கியே - புது
சக்திகள் யாவும் வருமே: சித்திகள் யாவும்
சேர்ந்து நன்மை வந்து கூடுமே.

வேழமுகத்தோனை வேண்டியிருப்போர்க்கு
வாட்டும் துன்பமில்லை வையத்தில்
சூழவந்து பற்றி நிற்கும் பிறவிப் பிணியை
சாகடிப்பான் அத்தும்பிக்கையான்
ஆழ்ந்த பக்தியொடு ஐங்கரனைத் தொழுவோருக்கு
ஆறுதலளித்துக் காத்திடுவான்
வாழ்த்தியே யவன் வாசநீறணிந்தால்
வருத்தம் யாவும் ஓட்டம் பிடிக்குமே.

ஆற்றோரத்து அரசமர நிழலிலே யவன்
அமர்ந்திருப்பான் வினை தீர்க்க
போற்றி! என்று சொல்லி அவன் பெயரை
பூசிக்க எக்காரியமும் சித்தியே.
வீற்றிருக்க வழியில்லை வேழமுகத்தோனுக்கு
வருவான் ஓடிக் கூப்பிட்ட குரலுக்கு.
ஏற்றிய தீபத்துடன் என்றுந் துதிப்போர்க்கு
எந்நாளும் குறைவில்லை என்பது நிஜமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலிதீர்ப்பாய் கந்தா!

ஆறுதலைத் தரும் ஆறுமுகப் பெருமானே! - மன
மாறுதலை நீக்கிடும் வண்ணமயில் வாகனனே!
தேறுதலைத் தந்து தெய்வ கதி தாருமையா!
வீறுகொண்டு வேலுடனே சூரனைச் சங்கரித்த
ஆறுபடை வீடுடைய ஆண்டவனே - நோய்தனைக்
கூறியழும் உந்தன் அடியார் வினைதீர்ப்பாய் கந்தா!

கந்தசஷ்டி தினத்திலே கந்தா ! உன் நாமத்தினை
எந்நேரமும் உச்சரிக்கும் ஏழை எம் முன்னே
செந்தூரப் புன்னகையுடன் கையில் வேலுடனே
வந்துனது காட்சி தந்து வரமளிப்பாய்!
தந்தைக்குபதேசம் செய்த தமிழ்க் கடவுளே!
செந்தாமரை முகத்தாள் வள்ளி மணாளனே!

புள்ளிமயில் மீது வரும் வள்ளி மணாளனே!
துள்ளிவந்து துயர்தனை நீக்கிடு எந்தனுக்கே
சுள்ளியிடையாள் வள்ளிக் குறத்தியோடு
மெல்லத் தெய்வானையையும் அணைத்துள்ளாய்
தெள்ளுதமிழ்க் கடவுளே! அதற்கிதுவா தருணம்?
வெள்ளமெனத் தொடரும் கலியழிப்பாய் வேலவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளாயோ?

ஆதிபராசக்தி அகிலமெல்லாம் நீ நிறைந்தாய்
நாதியற்றோ நாம் நாளெல்லாம் உனைநினைந்து
ஓதி உய்யும் வகை தரும் நின்னருளேயன்றி - இந்த
மேதினியில் வேறுளதோ மாதுமையாளே!

கலைவாணியே கல்விப் பெருங்கடலே! தேவியே
நிலையில்லா இப்புவிமீது ஏழேழு பிறப்பும் தொடரும்
விலைமதிப்பற்ற கல்விப் பேற்றின் அதிபதியே! அன்னையே
கலைத் தெய்வமே! உன் கழல் தொழுவோம் யாமே.

திருவும் புகழும் பொலியச் செய்பவளே! திருமகளே!
உருவந்தான் பொன்னொளி வீசிடும் உன்கோலம் கண்டு
திருவருள் வேண்டித் தவஞ்செய்வோர் பலரே
திருமகளே! எம் நிலையுணர்ந்து ஏற்றுவருள் புரிவாய்!

மலைமகளே தாயே! மாயவன் சோதரியே!
தில்லைநடராஜன் தேவியே! சிவகாமசுந்தரி
அல்லல் நீக்கி எமையாட் கொண்டு சுதந்தரி!
நல்லன வளிக்கும் நாயகியே! நீயே கதியெமக்கே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்திரு நாடு

தரைக்கீழ் நீர்ப்பூமி யென்று சொன்னால்
தெள்ளௌனப்புரியும் யாழ் குடா வென்று
விரையுமலர்த் தேன் பாயு நாடென்றால்
வந்துவிடும் நினைவினிலே கிழக்கிலங்கை
இரைகின்ற கடலோரந் தன்னில் இதமான சூழல்
ஆழத்தில் கடல்படு திரவியங்கள் அங்கே
உரைப்போர் வாயிற் தேனூறுவது என்றும்
ஊற்று நீரும் கற்பக தருவின் சுவையும்

சலசலக்கும் பல்வகைக் காவினங்கள்
சிலிர்த்துப் பூக்கும் பூமியே நம்மீழம்
கலகலவெனக் கத்துகின்ற கடலீனும்
கவின் முத்துக்கள் அதன் கரையருகே
பல்வகைத் தொழில் வினைஞர் உறையும் - மாம்
பழத் தீவாம் நம் ஈழமணித் தீவு
தலங்கள் தோறும் குடிகொண்டான்
துயர் துடைக்கும் தணிகை வேலோன்

மத்தியென்று சொன்னால் உதிப்பது
மனதில் பச்சைத் தேயிலைப் பரப்புக்களே
தித்திக்கும் உணவுகளாம் பனம் பொருட்கள்
தெவிட்டாது கொழிக்கிறது வடக்கினிலே.
இத்தீவின் ஓரதிசயமாம் கிழக்கே நோக்கின்
இசைபாடும் மீன்நாதம் கேட்கலாமே
எத்தனை வளங்களடா! இரத்தின துவீபமடா!
அத்தனையும் நம் தாய்த் திருநாட்டிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலநாடு

பாரதத்தின் பதக்கமெனப் பளபளக்கும் தீவு
பவளத்தீவாம் மாங்கனியுருத் தீவு - இந்த
ஈழத்திருநாட்டின் வடமேற்றிசையினிலே
இங்கிதமான தொரு அணியுறு அமைவிடத்திலே
ஆரணங்கு கார்த்திகைக் கன்னியர் எழுவர்போல்
இந்துமாக் கடலிலே இணையநின்று ஏழுதீவு
இன்பமாய்ப் புனலாடுவது கண்கொள்ளாக் காட்சி

சூழ்ந்தமைந்த தீவுகளில் பெருமிதமாய் நிற்பது
சுந்தர லைடன் தீவு : அது அந்நியர் நாமமே
அழகான லைடன் தீவுதன்னிலே அம்மாடி!
அளப்பரிய வளங்கள் அனைத்தும் கூறிடமுடியுமா?
மாகடலைச் சிறுகோலால் அளப்பது போன்றே
மகிமையுறு இத்தீவின் வளமளத்தல் ஒக்கும்
அந்நியரின் கழுகுக் கண்ணைக் கவர்ந்திழுத்து
அணியாகத் துறைமுகங்கள் அமைந்த தீவு

பாரிலுள்ளோர் விரும்பிடும் கனி முக்கனிபோன்றே
நீரலைகள் இத்தரையினிலே இனிமை சேர்க்கும்
நாற்கடல் சூழ்ந்த இத்தீவின் இதமான சூழ்நிலைக்கு
நன்றாய் அமைந்து நடுவனாயிருப்பது வேலணையே
சூரனைச் சங்கரித்த ஷண்முகக் கடவுளவன்
சுந்தரவேல் கொண்ட தணியாத கோபம்
அணைந்து அமைதிபெற்றதொரு புனிதபதியே
அணிபெற நாமம் பெற்றது வேல் அணையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணையின் வளங்கூற வார்த்தையிலையே
வேலவனருள் பெற்ற வேல்நாடு தானே
திக் கெட்டும் வானுயரும் கற்பகதருவின்
தித்திக்கும் சுவைமிகு பொருட்கள் திரண்டுள
கவினுறு காட்சியெனத் தென்னையொடு வாழையும்
காரமிகு மிளகாயொடு புகையிலையும் வெங்காயமுமாக
மின்னுகின்ற பச்சையுடை வேலணைப் பெண்ணுக்கே

பாய்ச்சுகின்ற நீரோ நேரிழையாளுடல்
பிளந்தெடுத்த உதிரமே இது சரதம்
ஏர் பிடித்த மக்களின் நற்றாயிவள்-பார்புகழ
இறுமாந்து நிற்கிறாள் இந்துமாவாழியிலே -பிரமன்
எழில் இதுவென உலகினுக்குணர்த்த விழைந்து
எளிதாய்த் தேர்ந் தெடுத்த இடம் இதுதானோ?
வினையொழிக்கும் விநாயகனும் தம்பியும் அன்னையுடன்
விரும்பி வாசம் செய்திடும் பலபதிகள் ஆங்காங்கே.

## முடிவற்ற புயல்

ஆங்கொரு நாளின்ப மாலைப் பொழுதினிலே
மாங்கனி நிறமுடைய மங்கையொருத்தி - தன்
பாங்கியர் மத்தியிற் பாங்குடனே ஓர்விதமாய்
தங்கப் பதுமையெனத் தரைமீதமர்ந்திருந்தாள்

நங்கையவள் நயமாக வாய் திறந்து
மங்கையரே! என விழித்தாள் தோழியரை
இங் கென் மனதிலே யுதித்த சந்தேகமதனை
பாங்கியரே நீக்கிடுவீர்! பண்புடனே ஆய்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கிய பொன்னொளிப் பொழுதினிலே - ஒரு
மன்னவன் என்னகந் தொட்டுவிட்டான்
அங்கவன் அழகால் மயங்கியே யின்று
என்வயந் தன்னை இழந்து விட்டேன்
மங்கை யென்னுள்ளத்தைக் கவர்ந்த
மன்மதன் யாரோ பகன்றிடுவீர்!
ஆங்கவனழகைக் கண்டேன் மனம்
ஆவலாய்ப் பறப்பதை நீரறியீர்!

சேடியர் மங்கையவள் வார்த்தையை
செவிமடுத்தனர் நன்றாயப் போதில்
கூடியே யமர்ந்திருந்து நுட்பமாக
கண்டனர் பதிலொன்று கலந்துபேசி
தேடியே மனம் வைத்த மங்கையிவள்
தேவன் அவனே யெனவறிந்து
ஆடினர் அக்கணப் பொழுதில் களிப்பால்
அழகிய வண்ண மயிற் கூட்டமென

கன்னியவள் தோழியரின் முகம் பார்த்து
கார் மேகங் கண்ட மயில் போல
வன்ன மகளாம் திரௌபதை யென்றே
வடிவினிலே இரதிக் கொப்பாகி
அன்பு மீதுரப் பெற்றவளாய் - அங்கே
அத்தோழியர் வதனம் நோக்கி
என் கேள்விக்கு உத்தாரம் கண்டீரோ?
எனக்கதைச் செப்பு மென்றாள்.

பாவையவ ளாவலைத் தோழியர் கண்டு
பணிவுடன் செப்பினரோர் செய்தி
தாவும் உன்மனம் யாமறிந்தோம் - நீ
தக்கோனை இன்று பெற்றுவிட்டாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவலாய் நாம் ஆராய்ந்து அத்தனையும்
அறிந்து விட்டோம் முத்தாய்ப்பாய்
சாவையே எதிர் நோக்கும் துன்பம் வரினும்
சேர்த்து வைப்போம் ஒன்றாகவே

பாவையர் வார்த்தையைக் கேட்டவளாய்
பரவசமுற்றிருந்தனள் பூங்காவினிலே
ஏங்கிய மனங் கொண்ட எழிலுருவாய் -அந்த
இராகவனுக்கு அவன் ஒப்பானாகி
வேங்கையே யெனத் தகும் வீரத்தினனாய்
வந்தானொரு ஆணழகன் அவ்விடத்தே
மங்கையிவளோ மானென மருண்டு
மறுதிசை நோக்கினாள் பதற்றமொடு

மானின் சாயலை ஒத்தவளே! - என்
மனங்கவர் தங்கப் பதுமை நீயே
மேனியே வாடும் நிலை கண்டு - நின்
மையல் கலைக்க நான் வந்தேன்
ஏனினித் தயக்கம் எந்தன் முன்னே
ஏந்திழையே வாராய்! என்னருகில்
உயிரினை அழிக்கும் துயர் வரினும்
உன்னை மறவேன் உத்தமியே!

நாயகன்றன் வார்த்தையால் நங்கை
நாழிகைதொறும் இன்ப வயத்தினளாய்
காயத்தே கோயிலமைத்துக் கனிவுடனே
கொண்டவனென நிறுத்தினாளக் கணத்தில்
தேயம் போற்றிட ஆசிபெற்றே நான்
சேர்ந்தின்பக் கதைகள் பல பேசி
நேயமுடன் இணையும் நாளெதுவோ -என
நினைந் தேங்கியே வாடினாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த தென்ன மகளுக்கென அறிய
நாட்டத்துடன் மாதா வாய் திறந்து
மடந்தைப் பெண்ணாம் தன் மகள் மனத்தின்
மாற்றத்தைக் காணப் பொறாதவளாகி
கிடங்கில் விழுந்த பிடியினைப் போன்றே
கண்ணே! நீ பதறுவதேனோ ? பகர்!
முடங்கியே உன்மனதில் உறுத்துவதை
மறையா தெனக்கு உரைத்திடு கண்ணே!

அன்னையின் வதனந்தனைக் கண்டு
ஆச்சரியத்தோடு திகைத்து நின்றே
என்னையீன்ற அருமைத் தாயே! - இங்கு
ஏதும் துன்பமில்லை என்மனதில்
இன்று நீயறிந்திடுவாய் என் அன்னையே!
எந்தன் மனதில் ஒன்றுமில்லை - எனப்
பின்னிய கூந்தல் குலைந்திடவே - அவள்
பிரிந்து அகன்றாள் அவ்விடத்தை

தாயின் மனத்தை ஏமாற்றியதில் - உளத்
துயரங் கொண்டாள் அம்மங்கை
தூயவன்பு கொண்டவளாம் அத்தாய்க்கு
தான் பொய்யுரைத்தல் பாவமென்றே
வாய்மையே சொல்ல அவள் துணிந்து
வந்தவாறெல்லாம் கூறிவிட்டாள்
தீயை வயிற்றில் வளர்க்காதே யென
திட்டினாள் அந்த நற்றாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் மனோநிலை மாறியது கண்டு
தடம் புரண்ட மனத்தினளாய்
நோயிலும் கொடிய வறுமையுற்ற
எமக்கேனோ இந்த நினைப்பென ?
பாயிற் படுத்துறங்க மனது நொந்து
பற்பல வெல்லாம் சொல்லிற்று.
ஆயிழை அணிந்த ஆரணங்கே! - அவர்
அந்தஸ்துக்குத் தகுதியா? என்றே

ஏங்கியிருந்த சில நாட் பொழுதினிலே
அழகே உருவாய் அவன் வந்து
தூங்கியிருந்து விழித்ததுபோல் - உன்முகம்
துவண்டதேனோ கண்மணியே!
தேங்கியிருக்கும் நீர்மடை போலிங்கே
தேக்கமாய்க் கண்கள் இருப்பதேனோ?
நங்கையோ நடந்தவற்றைக் கூறாது
நயமாக வார்த்தையைத் திருப்பிவிட்டாள்

எப்போ என் மணநாள் என்றேங்கி
எண்ணியெண்ணி வாடுகிறேன் இப்போ
தப்பாமல் என்னைத் தாரமாக இனியேற்றால்
தேவையற்ற அலர்களுக் கிடமில்லை-என
சப்த நாடியும் சந்தோஷத்தால் ஒடுங்கியே
செப்பினாளவ் வார்த்தை ஆவலோடு
இப்போதுதான் தருணம் எனவுணர்ந்து - சில
இயம்ப முயன்றான் அக்காதலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணே மணியே! நீ கேளாய் - என்
என் கருத்தைக் கவர்ந்தவனே! எனக்கொரு
கண்ணாக இருக்கிறாள் என் தங்கை - அவள்
கைப்பிடிக்க வருபவனுக்கு - இல்
மண்ணும் பணமும் இனாமாக அளிப்பதுடன்
மேலும் பவுண் பல தேடிய பின்
எண்ணியபடி நாம் இணைந்திடுவோம் -நீ
ஏற்றி வைப்பாய் ஒளிவிளக்கை

கயவன் தன்னைக் காதலனாகப் - பெற்ற
காரிகை இந்நிலைதனை உணர்ந்து
பயப்பதற்கே வார்த்தை யின்றி - நீரில்
விழுந்த எறும்பினைப் போலிருக்க
உயர்ந்த வாழ்க்கை நாம் பெறவே
உதவுவாய் நீயே மாதரசே - என
நயமாகச் செப்பினான் அவன் நுனி
நாவினில் இன்பம் ஊற்றெடுக்கவே

பூவதனங் கொண்ட பூங்குழலே - நான்
பகர்வதை நீ கேட்டிடுவாய்!
கோப தாபமகற்றியே சொல்வதைக்
கருத்தூன்றிக் கேட்டிடு பிசகாமல்
சீதன மென்றொரு பெரும் பிசாசு
சீற்றமுடன் ஆடுகிறது என் வீட்டில்-
பத்தினியாக உனை ஏற்றிட அது தடையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலன் கருத்து இதுவெனக் கண்டு
கருத்துடைந்த மனமுடையோளாக
ஆதவன் மேற்கே உதித்திடினும்
அடையேன் அவரை எஞ்ஞான்றும்
பூதல செல்வம் யாவுமற்றுப் பாவியாகப்
பிறந்திருக்கும் ஏழை நானே
வேதனையிது வஞ்சியர் வாழ்க்கை - இனி
வேறேது வழி? கன்னியாயிருப்பேன்

என்றெண்ணிய பாவையின் இதயம் - ஒரு
பம்பரமெனவே சுழலத் தொடங்கியதே
முன்னே நின்ற காதலனை நோக்கி - உம்
சிந்தை யாவும் நானறிந்தேன்
உன்னிப்பாகக் கேட்டிடுங்கள் நானுரைப்பதை
உள்ளத்தில் உதித்த வார்த்தை
என்னை நீங்கள் மறந்து விட்டே - வேறு
இனிய வாழ்வு வாழுங்கள்!

காதலியின் வார்த்தை செவிமடுத்த
காதலன் மீண்டும் சொல்கின்றான்
சீதனப் பேய் நம்மை பூதாகார மெடுத்து
சேரவிடாது தடுக்கிறதே
ஏதாகிலும் வேறு வழி இன்மையால்
இருவரும் பிரிந்தே போவோம் - என்று
காதகன் இவ்வார்த்தையைக் கல்மனதுடன்
கலக்கமின்றிக் கக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதகனாம் தன் காதலன் உரையால்
கன்னியவள் விரக்தியுற்று - நீர்
பூதலமே போற்றக் கொழுத்த சீதனத்தொடு
பாவையொருத்தியைக் கைப்பிடித்து
மாதவத்தோர் ஒதுக்கிய இல்லறத்தின்
மேன்மை தனைப் புரிந்துணர்ந்து
மோதலெதுவும் வாழ்க்கையிலின்றி
மகிழ்வுடன் வாழ்க்கை மேற்கொள்க!

செல்வியவள் கருத்தைச் செவிமடுத்து
சஞ்சலமுடையோன் மனம் மாறி
நல்லோர் ஆசிமொழி பல பெற்று - தான்
நல்லவனென்றே வேறோர் கன்னியை
பல்கலை கற்ற பெரியோர் இசைவால்
பதிவிரதையென வரித்தனனே - இக்
கல் நெஞ்சுடையானை இன்னும் மறவாத
காதலியவள் வாழ்விற் பெரும் புயலே

வாழ்க்கையொரு கரும்பாக இனித்து
வனப்புடன் கழிகிறது நாட்கள்
வாழ்க்கையே சூறாவளியாகச் சுழன்று
சீறி வீசுகிறது அபலைப் பெண்ணுக்கு
வாழ்வில் காதல் என்பது இதுதானா?
வீசும் முடிவற்ற புயல் இவளுக்கே
வாழ்க்கை என்பது இதுவேயானால்
வருத்தும் காதலேனோ? மானிடர்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தொருமித்த பின்

காலைவேளை கந்தன் எழுந்தான்
காய்த்திருந்த கைகளை நோக்கினான்
மண்வெட்டி பிடித்து உரமேறிய - தன்
மகிமைதனை உணர்ந்து கொண்டான்
உழைத்து உழைத்து இன்பங் கண்டு
ஊருக்களித்தான் தன் உதிரத்தை
பண்பும் அடக்கமும் கொண்டவனாம்
பழகிட இனிய ஆத்மா அவன்

நந்தனார் பரம்பரையிலே வந்துதித்த
நாட்டுழைப்பாளி கந்தனிவன்
காதலொடு தன் மகனுடனே வயலில்
கொடு வெயிலில் பாடுபடுவான்
கந்தன் மகன் நாதனும் - உயர்
கல்வியிற் சிறந்து விளங்கினான்
வைத்தியத் துறையில் கற்று
வகை வகையாக யாவுமறிந்தான்

மற்றோரால் ஒதுக்கப்பட்ட நாதனை
மறுக்கவில்லைக் கல்வி அவனிடம் வர
வீடு தோறும் சென்றால் தேவைக்கு
வெளியில் நிற்பாட்டிடுவர் ஊரார்
தன் குலத்தின் தன்மைதனை எண்ணி
தாங்காது மனங் கொதிப்பான்
என்ன பேதமை மக்களில் உண்டு?
என ஏங்கிடுவான் எப்போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியார் சுப்புராயன் வீட்டு
மூத்தமகள் கலைச் செல்வியாம்
நாதனைக் கண்டு காதல் கொண்டு

நாதனாக எண்ணினாள் தன்னுயிர்க்கு
கந்தன் மைந்தன் நாதனோ
காரிகை குலம் அறிவான்
செல்வியை அழைத்தே யாவும்
செப்பினான் தன்குல முறைமையை
செல்வியோ மனதைப் பறி கொடுத்து
செய்வதறியாது சோர்ந்திருந்தாள்
மங்கை எனக்கு எதுவரினும்
மறவேன் என் நாதனுறவினையே
விரதம் பூண்டாள் இதற்காக
வீட்டிலே செய்ய எண்ணவில்லை
உயர்குலத்து முதலியாரும்
ஊரில் மணமகன் பார்த்திட்டார்.

தந்தையாரின் மனமறிந்த
தத்தையவள் நடுநடுங்கியே
நாதனிடம் யாவும் செப்பினாள்
நங்கையவள் நிலை அறிந்து
ஊரடங்கும் இரவு நேரத்திலே
ஊரறியாது கூட்டி வந்தான்
விடிந்தது பொழுது இயல்பாக
வெறிச்சோடிக் கிடந்தது வீடங்கே.
மகளைக் காணாத தந்தையார்
மெல்ல எட்டிப் பார்த்தார் அறையை
வெறுமை அறையைக் கண்டவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்தது உள்ளம் எரிமலையென
உற்றார் வாயாற் கேட்டவை
உண்மை தானென்று அறிந்ததும்
கந்தன் வீட்டை எதிர் நோக்கி
கடிதிற் சென்றார் கூட்டி வர

மகளின் வதனங் கண்ட அவர்
மனங் கொதித்தார் வீறுடனே
ஏன் இங்கு வந்தாய்? - உனக்கு
ஏனோ இந்த இழிகுல இச்சையென
கையை ஓங்கினார் அடிப்பதற்கே
காவல் காத்தான் நாதனவன் குறுக்கிட்டு
நம் இருமனம் ஒருமனப் பட்டதும்
இங்கே எவருக்கும் வேலையில்லை

நாதனின் தோற்ற நிலை கண்டு
நகைத்தார் வைத்தியன் என்பதால்
வைத்தியன் என்று நீ இருந்திட்டால்
வையத்தில் உயர்ந்திட்ட எண்ணமா?
உனக்குரிய உன் குணத்தைச் இங்கே
சாதித்தே காட்டுகிறாய் - என்ற
பிதாவின் இழிமொழி தன்னைக் கேட்ட
பாசமகள் செப்பினாள் சில வார்த்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குரியவரைப் பெற்ற பின்பு
எங்கே உண்டு உங்களுக்குரிமை?
என்று கேட்டே தந்தையை
ஏங்கித் தலை குனிய வைத்தே
சாதியென்பது மனிதசாதி ஒன்றுதான்
சோதித்து எங்கு தேடினும் கிடையா
மேல் கீழ் என்பது எதுவுமில்லை இப்புவியில்
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்.

எல்லோரும் ஒருவரே என்பது
எம்மிடத்தில் இருந்தால் என்ன?
தாழ்ந்தவன் என நீங்கள் கூறிவிட்டால்
தங்கக் குணமும் படிப்பும் இல்லையா?
காதலில் ஒருமனப் பட்ட பின்பே
கவலையில்லை உயர்வு தாழ்வு பற்றி
இவ்வாறு பகர்ந்தாள் புத்திரி
இத்தனையையும் கேட்டது தந்தைமனம்

திரும்பியே பார்க்காது விடுவிடென
தாண்டி விட்டார் அவ் வீட்டை விட்டே
மகளின் செய்கைதனை யெண்ணி
மனங்கலங்கி அவளைக் கைகழுவி
மனமொருப் பட்ட பின் மற்றவர் வாக்கு
அனலிடைப்பட்ட மெழுகேயாம் என
ஆற்றி மனத்தை ஒறுத்து நாம் - இனி
மறுகுதல் தப்பென்று இருந்திட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமலருள் இடைவெளி

ஒருதாய் வயிற்றிலே ஒரு கொடியில்
இருமலர்கள் போல் வந்துதித்த
அருமையண்ணாவும் தம்பியும் ஆதரவுடன்
அன்புடனே வாழ்க்கைக் கப்பலை
கருவம் எதுவுமின்றிக் கண்ணியமாய்
செலுத்தினர் கஷ்டந்தனை மீறி
வருடத்தில் தம்பி இளையோன் மட்டுமன்றி
வகையறிவிலும்தாழ்ந்துள்ளானிங்கே

குடும்பக் கஷ்டந்தனை கருத்திற் கொண்டு
களைந்தெறியும் ஆவலால் முயற்சிகள்
எடுத்தேறிடுவோம் வாழ்க்கைச் சிகரத்தில்
என்ற வீறாப்புடனே புதிய உத்வேகம்
கடுகளவேனும் கஷ்டம் நம்மிடையே
கலந்திருப்பது ஒவ்வாதென்றே
பாடுபட்டனர் ஒற்றுமையாய்
பாசத்திலிணைந்த உள்ளங்கள்

படைக் கஞ்சான் தம்பியுனான் எனும்
பண்டை மொழிக்கு இலக்கணமாய்
தடைகளேதும் அணுகா வண்ணம்
தரமானதோர் ஆலையை ஆரம்பித்தனர்
இடையூறுகளை இழுத்தெறிய இளையோன்
இறுமாப்புடன் நின்றான் முறுக்குடனே
மடை திறந்தன்ன பாயும் நீர் போல்
மேற்கல்வி கைவரப் பெறாதவன் தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் மூத்த அவன் அண்ணனோ
அறிவுக் கடலில் மூழ்கி முத்தெடுத்தான்
வேண்டிய உடலுழைப்பை ஈயவே
விரும்பி உடம்பெடுத்தான் போன்றே
ஆண்டகை இளையோன் அண்ணாவுக்கோர்
ஆதரவாய் அவன் பெருமையையே
வேண்டி இறைவனைத் தெண்டனிட்டு
வாடாதுழைத்தான் மனப்பேதமின்றி

அறிவு மீதுரப் பெற்ற அண்ணனுக்கோ
ஆண்டுகள் பல செல்ல ஆசைகள் அவனை
அறியாமல் பற்றிப் படர அவன் மூளை
அங்குமிங்கும் ஏறி இறங்கியது
தறிபடும் பாடனைத்தும் தான்பட்டு
தம்பிதனைத் தடைக் கல் என்றே
குறித்துவிட்டான் மனவேட்டில் - தன்
குரங்கு மனத்தின் சபலத்தினாலே

தன்னுடமை எனப் பாராட்ட
தடை சொல்ல ஒருவன் உளனாகில்
அன்னவன் அருமைத் தம்பியே என்ற
அறிவுச் சுடர் மங்கி எரிந்திட
தன்னையே அவன் உணரானாகித் தலைகால் மாறி
தலைக் கனமேறி தன்னிச்சையுடனே
சின்னவன் தம்பியை உதறித் தள்ளியே
சிந்தையிலிருந்தும் விலக்கியே விட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோனின் ஆசியுடன் இனிதே மணம்
அண்ணன் புரிந்து நாட்கள் பறந்தன
களையா உழைப்பாளி தம்பி கருத்தினில் - தான்
கூடவிருப்பது குடும்பத்திற்குப் பிசகு
விளைவிக்கும் என எண்ணம் உதிக்கவே
வாஞ்சையுடன் மூத்தோனை நோக்கி
முளைத்த தன் கருத்தை நவின்று
மற்றோர் தொழில் தன்நோக்கம் என்றான்

சொன்னவன் செய்திதனைக் கேட்ட சோதரன்
சிறியவனிவன் திறமையால் தொழிலில்
என்னைவிட மேலோங்கி உயர்வுறுதல்
இனி நிச்சயம் எனவுணர்ந்தான்
அன்னவனாசையைக் கருவறுப்பதற்கே
ஆணவ மூளையை முறுக்கிவிட்டு
என்னடா தம்பி ! ஏன் உனக்கு இவ்வாசை?
எப்படித் தனித்திருப்பாய் ? எனலானான்

தமையன் செப்பிய சொற்களைக் கேட்டு
தனக்குள் திருப்தி அற்றானாகிடஉன்
இமையாக அண்ணியிருக்க நானிங்கிருத்தல்
நீதியல்லவே எந்தன் வாழ்வு நன்றே
அமைய நீ மனம் வைக்க வேண்டும்
ஆவலாய் நாடுகிறேன் பண உதவி
குமைந்த மனோநிலை அற்றவன் நீ
குறை வைக்காதே என் மனதில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் இளையோன்றன் ஆவலை - அண்ணன்
அறிந்த போதே தன் முதலாளித்துவம்
மாண்டு விடுமென மனதிலெண்ணி - தன்
மட்டத்தின் கீழேதான் தம்பியிருந்திட
ஆண்டகை அண்ணன் அவமாக எண்ணலுற்றான்
உடன் பிறந்தோன் கேட்ட பணத்தொகை
ஈண்டு என்னிடம் இல்லை பின்னர் உண்டு வழி -என
இரக்கமின்றியே இது ஏலாதென்றான்

தம்பியவன் என் செய்வான்? - இனி
தனக்கு யாரும் இல்லை என்றும்
நம்பி வந்த உடன் பிறப்பே - என்னை
நாயாய் மதித்தனன் இப்போது
சும்மா இருந்தால் என்ன வரும்? இவ்வுலகில்
சுத்த மனமுண்டு கையுமுண்டு - என
நம்பியவன் நாணயமாய் மூட்டை சுமக்கிறான்
நாளைய எதிர்பார்ப்பை மனச் சுமையோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் மங்கையும்

வண்டார்க்கும் சோலைதனிலே அழகிய ரோஜா
கண்டோரைக் கவர்ந்திழுக்கும் கவின் ரோஜா
வண்ணமாய்த் தலைநிமிர்ந்து வருவோரைக் கண்டு
கண்ணெனும் இதழ்களாற் சைகை காட்டியதங்கே

ரோஜாவின் மத்தியிலே பிறிதோர் ரோஜா வென
சரோஜா நின்றிருந்தாள் நெடுமலர்க் கொம்பாகி
பருவ எழில் பனிச்சிட பார்ப்போருக்கு விருந்தாக
துருவியே ஏதோ வொன்றைத் தேடுகிறாளங்கே

தேடுவது என்னவென்று பார்த்திட்டாலங்கே
நாடிவரும் நாயகன்றன் நல்வரவு நோக்கி
ஓடிக் கருவிழிகள் சுழல்கின்றன பம்பரமாய்
கூடியின்பம் அனுபவிக்க மனதிலோர் ஏக்கம்

ஆவியோடிணைந்த நாயகனை ஆவலோடணைத்திட
நீவிக் கூந்தலைக் கோதிவிட்டே இமைக்காது
தேவியவள் தென்றலிலாடும் ரோஜா போல்
தாவியே அங்குமிங்கும் நோக்குகிறாள் பாவம்!

தோட்ட ரோஜாவுக்கு நிகரானவள் அப்பாவை
விட்டுச் சரோஜாவுக்கு முள்ளில்லை ரோஜாபோல்
பட்டுவண்ண ரோஜாவுக்குச் சுமையில்லை மனதிலே
சிட்டுக்குருவி சரோஜாவுக்கு ரோஜாவின் இதயமில.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூதனம்

பெண்ணினம் இவ்வுலகிலோர் நூதனம்
பூவைமார் எழில் மேனி மெல்லினம்
அழகிலே மங்கையவள் ரோஜாமலரினம்
அன்பு அரவணைப்பின் சாயல் தாயினம்
ஆடவர் கருத்தழிப்பதில் ஓர் வல்லினம்
அடக்கம் எனும் அணிபூண்டால் மெல்லினம்

கன்னியவள் எயிறு ஒளிர் முத்தினம்
கண்களோ கவினுடைக் கயல் மீனினம்
சுருண்ட கூந்தலொரு கடலலையினம்
வெருண்ட பார்வையின் சாயல் மானினம்
இடையோ வண்ணமலர்க் கொடியினம்
இனிக்கும் காதற் சொற்களிற் சேயினம்

செவ்வாய் இனிய மலைத் தேனினம்
சிந்துகின்ற புன்னகையோர் நனினம்
கள்ளமற்ற உள்ளமோ தூய பாலினம்
கண்ணுக்கு அவள் சிறந்த ஓவியம்
போதையூட்டுவதில் நல்ல மதுவினம்
பெண்ணிற் பதிந்துள்ள சாயல் அற்புதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தைப் பிறவிகள்

மங்கையராய்ப் பிறந்திட நல்ல
மாதவஞ் செய்திட வேண்டுமம்மா! - என
எங்கும் எதிரொலிக்கப் பாடினார்
அரிவையர் பெருமையைக் கவிமணி
திங்கள் வதன மாதரை யெல்லாம்
தக்கவாறு போற்றி மதித்தனர்
சங்கத் தமிழ் வாழ்விலே அன்னை
ஆதிபராசக்தியின் அம்சமென்றே

மகப் பேற்றுக்குத் தாயுள்ளம் - இன்று
மனதினில் நினைத்தேங்குவது
சகம் போற்றும் மைந்தன் கருவில்
சனித்து வளர்ந்திட வேண்டுமென
சுகம் பெற்றிடுவாள் ஈன்ற பொழுதில்
சேய் மகனெனக் கேட்டவுடன்
அகம் சிறக்கும் பெண் பிறந்தால்
அவ்வேதனை மிஞ்சும் பிரசவ வேதனையை

பூதலஞ் சிறப்பது பெண்ணெனும் - ஒரு
பாவியரான பெரும் பிறப்பாலே
பூதலம் போற்றும் ஞானி அறிஞர்கள்
பிறக்கும் புனித இடம் எதுவெனிலோ
சிவந்த இதழ்ப் புன்னகை கொண்ட
சேயிழையார் நல்வயிறு காண்
சவக்களை பொலிவதேனோ? குழவி
பெண்ணெனக் கேட்டுவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதலத்தை வாழ்விக்கும் பெருமை
பூத்து நிற்கும் பூவையரின்றோ
மாதவஞ் செய்திடா மாபாவிகளின்
மறுபிரதிபலிப்புகள் என்பதா?
காதலுள்ளத்தால் கலி தீர்க்கும் - இக்
காரிகைகள் ஆற்றலில்லா ஆடவர்க்கு
சீதனமெனும் சீரிழந்த பணமீந்து
சேவிப்பர் குடும்பத்தை சீருடனே

சோலையிலே காதற் கதை பேசி
சுகமாகப் பொழுதைக் கழித்து
காலை மாலை என்பதற்கு கருத்திற்
கடுகளவும் பேதம் புரியாது
பாலைப் பொழிந்திடும் ஆடவர் கபட
பாஷையில் லயித்திருந்தே
வாலைக் குமரியவள் கருத்தையிழந்து
வையத்தையே மறந்திருப்பாள்

கருத்தை இழந்தது மட்டுமல்ல
காரிகைக்கு மனதைப் புண்பட
வருத்தும் வசைமொழிகள் பற்பல
வஞ்சி அந்த மலர் வாட
வருந்தக் கத்தரிக்கும் - இந்த
சீதனமெனும் கொடுவாள் - காதற்
குருத்தைக் கிள்ளியெறிந்து கன்னியர்
குமரமைச் சாக்கடையில் வீழ்த்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனதாற்றலால் உழைக்க முடியாத- இந்த
தனயர் குலத்தை மங்கையர்
சீதனமெனும் பெற்றோர் அளித்திட்ட
தட்சணையை இனாம் பெற்று
புன்மையுறு சொத்துக்களால் போற்றிப்
பொலிவூட்டுகிறான் வாழ்வை
என்னே பெண்ணின் பெருமை?

கன்னிக்கு நல்வாழ் வு அளிக்க - வீரக்
காளையர்க்கு இயலாத தொன்றா?
துன்பத்தில் பிறந்த சீதனமெனும்
துர்ப்பணத்துக்கு மோகத்துடன்
முண்டியடிக்கின்றார் பெற்றோரை முன்னிறுத்தி
மேன்மை இவர்க்குண்டா? ஆண்மை இதோ?
வன்மையுடையோர் என்பது அவர்தம்
வெறும் வாய்ச்சொல்லிற் தானா?

காதல் முதலில் மங்கையில் அல்ல
கொழுத்த பல சீதனத்திலே தான்
மாதவஞ் செய்தாலும் நம்மினக் கன்னி
மனங்குதறும் சீதனப் பெரும்பேய்
சீதனத்தை வாங்குவோரும் கொடுப்போரும்
சேர்ந்து இங்கு வாழும் வரையிலே
பூதலத்தில் கொடுங்கோ லோச்சுவதில்
வியப்பில்லைக் கண்டீர் எஞ்ஞான்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருவருக்கும் பொதுமை

பெண்களுக்குப் பெருமைதான் கற்பு
பூமியில் எங்களுக் கென்ன என்றே
பெண்ணினத்தை அடக்குவர் - தமது
பேதமையை அறியாமல்
ஆணினத்திற் கேனோ கற்பென்று
ஏதேதோ பல சொல்லிடுவர் - அன்று
மண்ணில் கற்பு இருவருக்கும் பொதுவென
முழங்கிப் பாடினார் மகாகவி

காதல் மனையாளுடன் இன்பமனுவித்து
காலம் செல்லவோர் செய்தியால்
மோதல் வந்தது குடும்பமதில் முன்பு
மனைவி காதலில் ஏமாந்தானென
சாதலை நிகர்த்த துன்பம் மனைவி பெற
சந்தேகமொடு கற்பற்றவன் என்றே
வேதனை நிறைந்த அபலைப் பெண்ணாக்கி
விரியம் பேசிடுவர் ஆண்களிற் சிலர்

தவறினாள் கற்பில் என் மனைவியென
தன்னூருக்குப் பறை சாற்றியே
அவளது மானத்தைக் கொண்ட கணவனே
அவதூறாகப் பல தூற்றி விட்டு
கவலைகள் அற்ற புதுமனிதன் போல்
காரிகை மனையாளைக் கைவிட்டு
கேவலம் வேறொரு பெண்ணை நாடி
இன்பந் துய்ப்பது நியாயமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிடப்பட்ட காரிகையோ இனி
காத்திருந்து ஏமாந்தவளாய்
தையலவள் மஞ்சட் குங்குமம் வெறுத்து
துன்பமே உருவாகிவிட்டாள் - அங்கே
மைவிழியாளொடு கூடிக் களித்து
கொண்டவன் நினைவுமின்றியே
வைராக்கியம் கொண்ட ஆடவர்
வழுக்குவது கற்பில் நியாயமா?

தேடி அவனடைந்த பெண்மணியோ - ஏலவே
தாரப்பட்டவள் ஒருவனுக்கு
நாடியே கைமைவிரதம் அவனிருக்க
கலைத்தான் விரதம் அவ்வாடவன்
ஓடியே நாட்கள் நகர்ந்தன - பல
இன்பந்தனைச் சுமந்துகொண்டு
வாடியே இருக்கும் தன் மனைவியின்
பதிவிரதம் அறியான் அவன்

ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி
அடுக்குமா இது வையகத்தில்
பெண் தவறிழைத்தால் மீண்டும்
பூவோடு வாழ்தல் முயற்கொம்பே
ஆணினம் தவறிழைப்பின் சேற்றில் மிதித்து
அலம்புவர் காலைக் குளத்திலே - என்ற
எண்ணங் கொண்ட மூடச் சமூகமே!
உன்னிடமொன்று கேட்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பெனப் படுவது இருவருக்கும் என்பதைக்
கருத்தினில் வைக்காத ஆடவர் குழாம்
கற்பெனப் படுவது காரிகைக் கணிகலம் - என
கூறித்தப்பும் சுயநலக் கும்பல்கள்
கற்பை எதிர்பார்த்து நிற்கும் இன்றைய
வீரமிகு ஆண்கள் குழாம் - பெண்
கற்பிழப்பது யாரால் என்பதைச் சற்று
கருத்துடன் சிந்தியாதிருப்ப தேனோ?

## எழுச்சிப் பெண்

குடதிசை வானத்திற் செம்பவளத்தின்
தீவு மிதப்பதுடன் முகில் மலைகள் அசைந்திடும்
நேரமாம் அந்தி மாலைப் பொழுதினிலேயோர்
மானொத்த சாயலுடைக் கன்னியொருத்தி
மிகக் காத்து நின்றாள் பஸ் வண்டிக்கு
கல்லெனும் கண்ணைக் கொண்டு
கனியெனும் பெண்ணுக்கு விசிட நின்ற
காளையைக் கவர்ந்த தந்த மங்கைக்கனி

மதியையோர் முகில் தழுவுவதையும்
மருவிய சிட்டு தொடர்ந்து பெடையுடன்
பறப்பதையும் கண்டான் கண்ணால்
தெரிந்தது தான் ஒன்றேயொன்று
தெளிந்தவுள்ளத்தில் எழுந்த காதல் - அவனை
அறியாத பாவை விழியை மாற்றினாள்
மோகத்திலிருக்கும் வண்டின் நிலை மறந்து
மண்ணை நோக்கினாள் பெண் என்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னத்தில் ஒன்று தந்திடு கண்ணே!
கலங்கி நிற்பதால் பயன் காணாய்
புகுந்து விட்டாய் என்மனதில் - ஒளியென
பாய்ந்து பரவச மூட்டினாய் உன் கரிய
வேலொத்த கண்ணைக் காட்டி - என்றிட
வேல்விழி கக்கினாள் ஒரு வார்த்தை
ஆண்சிங்கமே! போகத்திற் சிறுவிலங்கே
ஆணுக்கிலக்கணம் இதுதானா? வேறிலையா?

தெருவிலே அலையாது நற்கருமம் செய்யத்
தகுதியற்ற உன்னை நம்பியே உனது
பெற்றோர் உடன் பிறப்புக்கள் உள்ளனரே
பித்தனெனத் தெருவில் ஆடுகிறாய் சரசங்களென
ஒரு கையிற் செருப்புடனே மறுகையை நிமிர்த்தி
அறிவற்ற முண்டமே! எனத் தன் வாய்ச்சொல்லுக்கு
சைகை செய்து பத்திரகாளி போலானாள்
ஆடவன் தன் சுயவுணர்வு பெற்றுத் தெளிந்து

எழுச்சி பெற்ற பெண்ணைக் கண்டே
கும்பலில் பறந்தது மானமென்றே
ஆளுடன் ஆளாக மாறி மறைந்து
பாய்ந்த புலி பதுங்கி யோடியதே
எழுச்சிப் பெண்ணின் நிலையறிந்து
ஏதும் செய்திடலாம் தனிமையிற் பெண்ணை
என்றவனில் ஊறியிருந்த வீரநம்பிக்கை
அன்றே அகன்றது அவனைப் பார்த்துச் சிரித்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கச் சிலையோ?

பெண்ணோ அவன் மானின் பிடியோ?
பூவையோ தங்கப் பேழையோ
வண்ணமலர் கொம்போ? வாடாமலரோ?
வானில் தவழும் வளர் மதியோ
மண்ணில் வந்துதித்த மாய மோகினியோ?
மைந்தர் உயிர் பறிக்கும் கூற்றுவனோ
கண்ணைப் பறிக்கும் காரிகை தன்னுடல்
கடைந்தெடுத்த தங்கச்சிலையோ?

கண்ணா இது காளையர் மனதைக்
கனன்று புண்ணாக்கும் கொடுவேலோ
வண்ணமலர்க் கூந்தலோ ? வானத்து
வெளியிலுள்ள கருமேகக் கூட்டமோ?
வண்ணச் செவ்விதழோ? வாயூறுகின்ற
வெல்லத்தின் கொள் கலமோ?
எண்ணிப் பார்க்க இனித்தலால் அது
அனைத்தும் சுவறிய அடிக்கரும்போ?

கலீரென் றொலிப்பது காலின் சதங்கையோ?
கருத்திழந்த காளையர்தம் பிதற்றலோ
சிலிர்த்த மலரிங்கு காந்தள் மலரிங்கு கரமாகச்
சரணாகித் தொழும்பு பூண்டதோ?
புலியெனப் பாயும் வாலிபருயிரை
பலிகொள்ளும் பலிபீடச் சாயலோ?
சலியா விருந்தெனக் கண்ணூடே சென்று
கருத்தை யழிக்கும் போதை மதுவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமதிலென் றும் பிறக்கவில்லைத் தெளிவு
அதோவிதோ என் றுன்னும் மனம்
மையலூட்டும் மைவிழியாளென்றால் - அதில்
மறுவிருப்பது போற் தோன் றும்
தையலவன் தன்மையைச் சொல்லத்
தமிழில் வார்த்தையிலையே - முருகன்
கைவேலாயுதந்தான் கன்னியெனக்
கவின் பெற் றொளிர்கின்றதோ?

## காதல் ஏழை

மாங்கனியே! மங்கையே! மணிவிளக்கே!
தேங்கிய காதல் நீர் மடை திறந்து
தீங்கனிச் செஞ்சொற் பாவையுன்னையே
ஏங்கியே இருக்கின்றேன் ஏழை நான்
மின்வெட்டுப் பார்வையால் எனக்கு
மன்மத லீலைகளை ஊட்டிவிட்டாய்
இன்பமே எனைச் சேர வாராய் - நீ
மன்பதை உயிரைப் பதைக்க வாங்காதே!

தங்கமென மின்னுகின்ற மங்கை நல்லாளே!
மங்கிய இருளில் ஒளி விளக்கைப் போன்றே
பங்கமேற்படாது எனதாசையை நீக்கிடச்
சங்கோஷமின்றி எனை அணைத்திடு கண்ணே!
ஆராவமுதே! கண்ணுக்கு விருந்தே
தீர வொரு சொற் கூறாது பறக்கிறாயே
ஓரக் கண்ணால் என்னுயிர் வாங்கியே
தூரப் போவதன் காரணமென்ன கூறிடு!
மின்னற் கொடியே! என் கண்ணைப் பறித்தே
பின்னல் விளையாடும் முதுகைக் காட்டியே
என்னுயிரை இழுத்துச் செல்கிறாயே இனி
என்நிலை என்ன ? நானொரு காதலேழையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலோ காதல்

காதலோ காதல் காணுமிடமெல்லாம்
கன்னியரும் காளையரும் கதைபேசுவர்
ஆதரவு பட்டு அன்புக் கயிற்றால் கட்டி
அனுபவிப்பர் கோடியின்பம் அநேகர்
பூதலத்தில் இக்கலியுகத்திலே காதல்
பலவுக்கும் சந்திப்புகள் பற்பல
சாதலை வரவேற்கும் காதல் நாகரிக
யுகத்தில் கூடிப்பிரியும் விளையாட்டோ?

மலிந்த அன்புள்ளங்கள் இரண்டு
மனதாற் கலந்த வாழ்க்கை
வலியுடைப் போருங்காதலும் வீரமும் நிறைந்த
வண்டமிழ்ச் சங்க கால இலக்கியத்திலே
பொலிகின்ற அன்பினாற் பொருந்திய உள்ளங்கள்
பாதை மாறியிப்போது கண்டதுங் காதலாக
கலியுகக் காலத்தில் தலைகீழ் மாறுவதைக்
கருத்துடனே கேட்டிடுவீரிதை.

கல்லூரியிற் கற்கும் மாணவரிடையே
கருத்தொன்றி எழுவது ஒரு காதல்
பஸ்வண்டியிற் பயணம் செய்யும் வாலிபன்
பாவைக்கு இருக்கை கொடுத்திட எழுந்திடுங் காதல்
காரியாலயத்தில் வேலை பார்ப்போரிடையே
கருத்தினில் ஒன்றுபட்டு மலர்வது காதல்
வயற்காட்டில் உழைக்கும் வாலிபனுக்கு
வடிவான அத்தை மகளால் வந்திடுங் காதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களின் கீழ் இளைப்பாறச் சென்றால்
மயங்கி நிற்கும் காதல் ஜோடி அங்கே
மதகிடை இருந்திடச் சென்றிட்டால்
மழலையாய்க் காதல் மொழி பேசும் கிளிகள்
பசியென்று ஓட்டலுக்குச் சென்றபோதில்
பகவானே! அங்கேயும் காதற் பறவைகள்

பஸ்நிலையத்தில் பலர் கண் முன்னே
பக்குவமாய்ப் பரகசியக் காதற் சந்திப்பு
படிக்கப் போகிறேன் எனச் சென்று
படத்தியேட்டரில் பள்ளியறைப் படிப்பு
இறைவனை வணங்க கோவிலுக்குச் சென்றால்
ஐயகோ ! அங்கேயும் காதல் இணைப்புக்கள்

பள்ளிக்கூடம் தொடக்கம் பஸ்நிலையம் வரை
பருவமக்களிடையே பலித்திடுமிவ் வுணர்வு
அன்னவர் இறக்கும்வரை நீடிக்குமா? என்றால்
இவ்வுலகில் அது இல்லையே.அது தொல்லையே
காதற் சிட்டுக்கள் என்றிருந்த இருவர்
காத்திராமல் ஒருவருக்கென பிரிந்திடுவரே.

புனிதமான இத்தெய்வீக உறவிப்போ
புரியாத புதிரான பிள்ளை விளையாட்டோ?
கனியுஞ் சுவையும்போலக் கலந்திருந்த
காதலர் பின்னாளிற் பிரிந்துபோவதே அதிகம்
வீட்டு எதிர்பார்ப்புகளால் காதலைப் பிரித்து
புனிதக் காதலைச் சாகடிக்கும் மூடச்சமூகமே!
கண்டவுடன் காதல் உண்டாகுதே இப்போ
கண்ணற்ற காதலால் வருவது விபரீதம்
மரநிழலில் மருவியிருந்த சிட்டுக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்து மிரள்வதேன்? அங்கு சாதிப்பிரிவினை
குலவியிருந்த காதற் சிட்டுக்கள்
குலைந்து போவது சீதனம் என்ற கல்லால்
இணைந்திருந்த இருஉள்ளங்கள் பதைக்க
இரண்டாக வெட்டுகிறது பதவியந்தஸ்து.

ஆராய்ந்திறங்கிய காதலால் என்றும்
அமைதியான வாழ்வுண்டு உண்மையே
அழகிலே மயங்கி மனதை அழித்திட்டால்
அங்கேதான் ஆபத்து உருவாகுமே
வெளித் தோற்றத்தில் மயங்கிக் கருத்திழந்தால்
வேதனைக் காதலது புரிந்து கொள்வீர்!

## காதலனால் கைவிடப்பட்ட.....

வண்டார்க்கும் சோலை தன்னிலே வாலிபர்
கண்ணைப் பறிக்கும் காரிகை யொருத்தி - மது
உண்டபின் மலருக்கு மலர் தாவுகின்ற
வண்டின் செயலதனை நோக்கி நின்றாள்

தேன் சேகரித்தலையே செயலெனக் கொண்டு
சின்ன இறகு சுழல ரீங்காரப் பண்ணிசைத்து
தன்னின்பம் திருப்தியுறத் தாவித் தாவி
பன்மணப் பூவினைச் சொந்தமாக்கியதே

இச்சை தீர்ப்பதற்கே மலருக்கு மலர் தாவும்
இச்சிறு வண்டினைப் போல் ஆடவரிற் சிலர்
வச்சிரம் ஒத்த வனிதையர் அன்புறவைத்
துச்சமாக மதித்துத் தூரப் போவதேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரப் போன வண்டொத்த மைந்தரோ
வீரம் பேசி அலர் தன்னை அவளுக்குச்சுமத்தி - தாம்
பேரம் பேசிடும் பொருள்களென எண்ணி
தாரம் தேடிடும் விந்தை தான் என்ன?

இதயமலர்தனை ஒருவனுக்குச் சூட்டியபின்
இதமாக மற்றவனுக்கு இடமில்லை அவள் மனதில்
இதயமதில் கோவிலமைத்து விடுவாள் அவன்
இந்த நிலை இல்லாதிருப்பதேன் இளைஞருக்கு?

கல்லிலே கண்ணாடி வீழ்ந்தால் சேதம் கண்ணாடிக்கு
கல்லானது கண்ணாடியில் வீழ்ந்தாலும் சேதம் இதற்கே
இல்லிலே கன்னியாக இருந்தால் வசை கன்னிக்கு
அல்லல் தரும் காதற் தோல்வியாலும் வசை கன்னிக்கே

என்று பற்பல எண்ண அலைகள் வேகமாக
கன்னியிவள் மனதினிலே ஆர்ப்பரித்துப் பாயவே
தன்னை மறந்தே பின் உலகை மறந்தே
கன்னெஞ்சுக் காரரைத் தேடி விண்ணுலகம் ஏகினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீ........ தனமே

ஆண்பிள்ளை தானே நான் - எதுவும்
என்னை அசைத்திட முடியுமா? என்றே
எண்ணிக் கர்வத்துடன் வாழ்ந்திடும்
எங்கள் ஆணினமே! உங்களிடம்
இன்று நான் ஒன்று கேட்கின்றேன்
உம்மைக் கைப் பிடிக்கும் - ஒரு
பெண்ணை வாழ வைக்க முடியாமல் அவள்
பெற்றோரிடம் கை நீட்டுவதேன்?

பருவமது நிரம்பிய எழிலுடைய ஓர்
பாவையை மணமுடித்து வாழ - ஏனையா?
கருமித்தனமாக காசு லட்சங்கள் கேட்கிறீர்?
கன்னியைத் தந்த குற்றத்திற்கா?
வருகின்ற இன்ப துன்பங்களிற் பங்கேற்க
வருபவளிடம் விலை பேசுகிறாயே உன்னை
தருமமா? இது நீதியா? என்று கேட்டால்
தாய்தந்தையரைக் குற்றவாளியாக்குவீர்!

சீதனம் கேட்பது நாமல்ல - என
சிறப்பாகப் பேசித் தப்பும் ஆடவரே
மாதா தன் மகளைத் திருமணச் சந்தையில்
நிறுத்துவதில்லை மகளைத் தானே
பேதமையிது ஆண்வர்க்கத்தினரே - நீவிர்
பொறுமையுடன் ஆழச் சிந்தித்து
சீ........ தனமே உமது கொடு பிடிக்கு - நாம்
சாட்டையடி கொடுப்போம் என எழுவீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனையோ மாறுகிறது.....

உள்ளங்கள் இரண்டு இணைவதற்கு
உத்தரவாதமளிப்பது சீதனந் தானோ?
வெள்ளையுள்ள மங்கையவளைக் கைப்பிடிக்க
வேடிக்கை: சீதனம் முதல் வையென
கொள்ளை கொண்டு பணத்தை அள்ளி
கம்பீரமாகப் பேசிடும் ஆடவரே!
உள்ள பொருளையும் அவள் கொண்டு வந்தால்
உங்கள் மனம் திருப்தி பெறுமா?

பெற்றோர் தான் சீதனம் கேட்கின்றனர் - எனப்
பெருமையுடன் பேசிடும் ஆண்களே!
உற்றார் பெற்றார் கூட அரிதாயுள்ள ஜேர்மனியில்
உரியமுறையில் சீதனம் கேட்பது யார்?
பெற்ற நாட்டில் நீவிர் சீதனத்தைப்
போக்கடிப்பீர் என எப்படி நம்புவது?
நாற்றுப் போட்டு வளர்ப்பது போல்
நன்றாக இங்கும் வளர்கிறதே.

வாய்கிழிய சீதனம் எனக்கத்தியும்
விடுவிட்டு நாடுமாறி வந்திங்கும்
வாய் கூசாது சீதனம் கேட்டு நிற்கும்
வீரமுள்ள சீதன ஆதரவாளர்களே!
தாய் நாட்டிற் தான் ஒழிக்க முடியவில்லை- ஆனால்
தாண்டி இங்கு வாழ்ந்தாலும் சீதனத்தை
ஆய்ந்து வகையாகக் கேட்டிட
வெட்கமில்லையா உங்களுக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் இயலாமையை மறைத்து வாழ
உங்களுக்குச் சீதனந்தான் அவசியமோ?
எங்கள் கை எமக்குண்டு எமக்கேன்?
இழிந்த சீதனம் என்றெண்ணிவிட்டால்
மங்கி மறைந்தொழியும் சீதனப் பேய்
மானிடர் முன் வகுத்த இம்மரபை
எங்கள் காலத்தில் ஒழித்திட முடியாதா?
எத்தனையோ மாறுகிறது ..ஆனால்?

## சீதனக் கொடுமை ஒழியாதோ?

ஆற்றங்கரையோரம் அழகிய மண்மேட்டில்
பற்றையைப் போன்றிருந்த தென்னஞ் சோலையிலே
வீற்றிருந்தே பல காதற் கதைகளை எதிரிலிருந்து
சாற்றியே இருந்தனர் கண்ணனும் ராதையும்

உள்ளத்தைக் கொள்ளையிட்ட கண்ணனிடம்
கள்ளச் சந்திப்பை இனி நிறுத்தியே நாங்கள்
துள்ளித் திரிவோம் களிறும் பிடியும் போன்றே
கொள்ளையின்பம் பெறக் கூடுவோம் கடிமணம்

வீடு சென்றனன் ராதையின் கருத்தையேற்று
மாடியிலிருந்த அன்னைக்குத் தன் விருப்பை
எடுத்தியம்பினான் ஏக்கம் நிறை உள்ளத்துடனே
கேட்ட தாயோ அச்சடித்த சிலையானாள்

கொழுத்த சீதனம் வாங்கக் கட்டிய மனக்கோட்டை
விழுந்தழிந்ததே எனவேங்கி ராதையை மறந்துவிடு! என்ற
கழுத்தறுக்கும் தாயின் உரை கேட்டு கண்ணன்
இழக்கத் துணிந்தான் காதலி ராதைப் பெண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் மனமிது என அறிந்த ராதையோ
கண்ணா! கண்ணா ! எனமனங்குமுறி அரற்றி
விண்ணகஞ் சேர விரைந்தாள் நிம்மதியாக
பெண்ணுயிர் குடிக்கும் சீதனப்பேய் ஒழியாதோ?

## மழலைச் செல்வம்

இல்லறத்தின் இணையற்ற செல்வமொரு குழந்தை
இன்பத்துக் கெல்லை காணார் அதன் அன்னைதந்தை
குலம் செழிக்க வந்தவொரு தவக் கொழுந்து
குடும்பமதில் குறைகள் தீர்க்கும் அருமருந்து
ஒலிக்கின்ற குரல் நாதத்தை வென்ற இனிமை
தளிர் விடும் மேனி ஒரு மலரினது மென்மை

சிறு கை நீட்டித் தந்திடும் முத்தங்கள்
சிரித்திடும் சிரிப்பினிலே பல அர்த்தங்கள்
கலகலக்கும் குதூகலம் வீட்டினிலே - நித்தம்
குங்குமச் சிமிழ்க் கன்னமதில் சிறுகுழிவு
குறு குறு நடையால் கொடுத்திடும் களிப்பு

பார்த்தால் பார்க்கச் சொல்லும் கவர்ச்சி
பால் வடியும் வதனத்தில் குறுநகை மலர்ச்சி
தீராத குறும்புகளால் சொக்கிடச் செய்யும்
தடையற்ற கேள்விகளால் மலைத்திடச் செய்யும்
மங்கையை மெருகேற்றுவது பிள்ளைக் கனியே
மாபெருங் களங்கம் அவளுக்கிது இல்லாவிட்டால்
மகிழ்ச்சி தாண்டவமாடி மனதைக கவர்வது
மழலை யென்னும் அரும்பிறப்பினாற் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுகோல் எடுத்தேன் நான்

பூதலத்தில் வந்துதித்த தேமொழிப் பாவையர்கள்
சீதனத்தின் தாக்குதலால் வாழ்வு வெறுத்து - சாதலை
நோக்கியவர் செல்ல காலம் அழைக்கிறதே யின்று
இக்காலம் கொடிது காண்.

பருவமுற்ற மங்கையவர் பார் சிறக்கவே
திருமகளாய் இல்லில் விளக்கேற்றி - மெருகுடனே
இல்வாழ்வை மேற் கொள்ள வேண்டாம் நீ
நில் என மறுப்பது சீதனமே

வறுமையுற்ற குடும்பமதில் வனப்பு வனிதையர்
கருமம் பெண் பிறவியென விரக்தியுற - விறுடனே
சீதன மெனும் பேய் சிரித்தாடுதே இதை
மாதவத்தோரும் தடுத்தல் அரிதோ?

கன்னிக்கு கண்ணீரை வரவழைக்கும் இந்தப்
புன்மையுறு சீதனத்தின் கொடுமையால் - இன்று
திருமண அகவை தாண்டிவிட இறைவா!
தருவாய் கதி என்றுள்ளனரே.

வாட்டுமிந்தச் சீதனத்தால் ஏழ்மைப் பெண்கள்
காட்டும் அன்பு பண்பிற்கில்லைப் பெறுமதி - மோட்டு
மதியால் பணத்தைப் பேணிவிட்டால் வாழ்வில்
கதி வேறுண்டோ கன்னியர்க்கு.

சீர் பெற்றிடும் சமுதாயம் என்று சொல்லி
நேர்மையுடன் ஆதரவு நல்குவரென்றே - மார் தட்டி
எழுத்திலும் வடிப்போமென எடுத்தேன் எழுதுகோல்
கழுத்தில் விழுந்ததே அவர் நிந்தனைக் கத்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைக் கனியமுது

இல்லினுக்கோர் அருஞ்செல்வம் - அது
இல்லாவிட்டால் இல்லையங்கே சொர்க்கம்
குவா குவா என்றினிய சத்தம் - அது

காதினிக்குமோர் அதிசயச் சத்தம்
பெறற் கரிய பேறுகளின் மொத்தம் - அதனால்
பெற்றிடும் இன்பங்கள் பல நித்தம்

பசித்தால் குரலொரு விறிட்ட வன்மை
பால் புசித்தால் குரல் நாத இனிமை
பார்ப்ப தெல்லாம் அதற்குப் புதுமை - நாம்
பழகிவிட்டால் அதுவோர் பதுமை
மலர் போன்ற உடலொரு மென்மை - இந்த
மழலையின் கதைகள் யாவும் ஒருமை.

கருவிழிகள் இரண்டும் குறுகுறுக்கும் கருவண்டு
கன்னமொரு ரோஜா மலர்ச் செண்டு
கால்களோ இள வாழைத் தண்டு
தேன் சிந்தும் பூவிதழ் வாயொன்றுண்டு
தேனிதழ் வண்ணங் கிளியின் சொண்டு - என்றும்
தேனூறும் மழலைக்கீதம் அங்கேயுண்டு.

கால்களில் கவினுறு தள்ளாட்டம்
கடுக நடந்தால் அதுவோர் கோலாட்டம்
பஷ்ணங்கள் கிடைத்தால் கொண்டாட்டம்
பறித்துவிட்டால் மனதில் திண்டாட்டம்
ஏன் ஏனென்ற கேள்விகளின் நீட்டம்
அன்னைக்கோ அதுவோர் போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்த ரோஜா

காலைவேளை இறைவணங்கிச் சென்று
வேலை முடித்து திரும்பிக் களைப்புடன்
மாலை ஸ்ஞானம் செய்து முடித்து
பாலை யருந்திடு போதினியே ஓர்
தேனினும் இனிய குறட்டையொலி கேட்கவே
கேட்ட திசையில் கால்கள் நடந்தன
நடந்த அதிர்வையும் கேளாமல்
நவீனமாய் ரோஜாச் சிரிப்புடன்

கால்களை ஆங்கே பரப்பிய - அழகு
துயில் கொண்ட மழலையின்
சிரித்த ரோஜா முகத்தினைக் கண்டேன்
களைப்புகள் கவலைகள் பறந்திட - நான்
சொர்க்கா புரிக்குச் சென்ற போதில்
என்னங்க! என்றொரு வார்த்தை கேட்டு
அருகில் மனையாள் அதி பெருமிதத்துடன்
நிற்பது கண்டு மனம் மகிழ்ந்தேன்:

தாய்மை இன்பத்திலொரு பகுதி பெற்றேன்
கண்ணை விழித்தே குழவி இரு கைகளை
நீட்டிக் கால்களை அசைத்தே - தன்
இருவிழியால் நான்கு விழிகளை நோக்கி

செவ்வாய் திறந்து மழலைமொழி பேசி
உலகம் போற்றும் உத்தமனாவே னென
முகத்தை உலுப்பிக் காட்டிற்று
தென்றலிலாடும் ரோஜா போன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டினிலோர் கீதம்

இல்லங்கள் தோறும் இனிக்கும் கீதம் - அது
இன்ப சுகமளிக்கும் மழலைக் கீதம்
கன்னங்கள் ரோஜாச் செண்டு
குறுகுறுக்கும் விழிகள் கரு வண்டு
சிவந்த இதழ் ஒரு குங்குமச் சிமிழ் - அது
சிந்திடும் முத்தங்கள் தேனமுது

மேனியொரு பூவின் மென்மை
மேதினியில் இதுவோர் புதுமை
பேறுகளிற் பெறற்கரிய செல்வம் - இதைப்
பெற்றவர்கள் அனுபவிப்பது சொர்க்கம்
வீட்டினிலே இனிய நாதம் - அது
வீறிட்டு அழும்போதிலே புதுக்கீதம்

தேன் மழலைச் செல்வங்களின் சிரிப்பு
துன்பத்தையும் மறக்க வைக்கும் வனப்பு
கைகால் அசைத்துக் காட்டும் குறும்பு
காண்பவர்களுக்கு அதுவோர் கரும்பு
தத்தித் தத்தி நடந்து கதைகள் பேசும்
பாட்டுக்கள் ஒலிக்காத மனைகளெல்லாம்
பாழடைந்த சுனைகள் எனலாமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை

அன்னையைப் போன்றொரு தெய்வமுண்டோ?
அவனியில் அவளுக்கோர் இணையுமுண்டோ?
உதிரமதைப் பாலாக்கி உவந்தளித்தே - தன்
உயிரினும் மேலாய்க் குழந்தையை மதித்திடும்
தாய்மை அன்புக்கு எதுவும் ஈடாகுமோ?

நாக்கசந்திடும் மருந்துகளை நாடியுண்பாள்
நலமுடை வாழ்வைக் குழந்தைக்கு கொடுப்பாள்
சேயாகிய எமைத் துன்பம் நெருங்காது
சோராத உளத்தினளாய் எமைக் காத்திடுவாள்
நோயுற்ற காலை கண் துஞ்சாது நாளுமெலிந்து
நமது சிரிப்பில் காண்பாள் கோடி இன்பம்

தனக்கென்று ஏதும் வைத்தறியா உளத்தினள்
தங்கு தடையின்றி ஓடிடும் அன்பு ஊற்றவள்
மக்கள் திருப்தியே தனது என்றெண்ணி
மழலை மகிழ்ச்சியைத் தனதாக்கிக் கொள்வாள்
குற்றம் பொறுப்பதிற் கண்கண்ட தெய்வமவள்
கூற்றமென வரும் பசியைப் போக்கிடும் அன்னை

நோய்கண்ட போதில் பரிகரிப்பதில் நற்றாதி
நம்முக வாட்டம் கண்டு உயிர் தரியாள்
இரக்கம் பேரன்பு கொண்ட தாய்மையை
இழிவாக எண்ணுபவர் மனிதரல்லர்
பெற்ற மனதைக் கோணச் செய்யாது - அவளைப்
பெருமையுற வைப்பது நம் கடன் கண்டீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாய்ந்த மரம்

அன்னையவள் உச்சி மோந்து உடையணிவித்து
தன் குழவியை அனுப்பினாள் பாடசாலைக்கு
சின்னப் பிள்ளையவன் சிந்தை தெளிவிலான்
இன்பமாய்ப் படிக்கின்றான் பாடமதை

வித்தியாசாலைக்கு விரைந்த மைந்தன்
வாடாத பூப் போன்ற அவன் வதனமின்று
வாட்டமுற வேறு நடந்தது கல்லூரியிலே
நாட்டமொடு விளையாடும் போது தீண்டியதரவம்

அரவத்தின் விடம் தலைக்கேறிடப் பாலகன்
அரவஞ் செய்யாது மல்லாந்தான் மௌனமாக
பரவிய செய்திதனைக் கேட்டதாய் பதைக்கிறாள்
கரமதைத் தலையிலடித்துக் கதறுகிறாளவள்

மாரியேயென மைவிழியில் நீர் சோர - மைந்தா!
வருவேன் என்றாய் நீ வரக் காணேனே

தருவேன் என்ற முத்தம் தரக் காணேனே
பாராயென் முகம் பாலகா வாராயோ?

போட்டபடி எல்லாம் வீட்டிற் கிடப்பதேனோ?
நீட்டியுன் சிறுகையாலெனை அணையாத தென்னே!
ஓட்டமொடு நடையுமாய் வந்து புன்னகை
காட்டும் முத்துப் பல்லின் ஒளி மங்கியதேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசறு பொன்னே ! மைந்தா! புதல்வா!
நேசமுடை யெனை மறக்க மனம் வந்ததோ?
பாசக்கயிறு தனை பாலனுன்மேல் பக்குவமாய்
விசிய காலன் என்னை மறந்ததேனோ?

சேயினுயிர் பெற்று மீண்டுவர - அத்
தாயவள் ஆவி துரத்தியது மைந்தனுயிரை
பாயும் பாசத்தினாற் சேயுடன் ஒன்றிவிட்ட
தாய் சேய் உடல்கள் ஒன்றின சுடுகாட்டில்

தாய்மையின் உள்ளந் தரணியில் என்றும்
வாய் விட்டுச் சொல்லொண்ணா அருஞ் சக்தி
சாய்ந்த மரமெனவே அவ்வன்னை செயலற்று
காய்ந்து வுளத்தோடு குழவியிற் சாய்ந்தனளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகு

அழகு என்பதன் பொருள் யாரறிவார்?
அழகழகென நாளும் அரற்றுவோர் தம்மை
இலக்கணம் கூறிடுவீர் அழகினுக்கே யென்றால்
இன்ன சொல்வதென்று அறியாது திகைப்பரே
அழகு என்பதன் அர்த்தம் தானென்னே!
ஒருவர் அழகென்பதை மற்றவர் மறுப்பதேனோ?

அழகெனப்படுவது பார்ப்பவர் மனதை
அனுபவிக்கும் இரசனையைப் பொறுத்ததே
அழகென்ற மூன்றெழுத்தின் பொருளினை
இதுவெனக் கூறவியலார் அறிஞர்கள்
எங்கே அழகுண்டு? எங்கே அது இல்லை?
என்பதை அறிவதில் எமக்கோர் ஆர்வம்?

ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொரு அழகு
இலக்கணம் அவ்வளவுக்கும் கூறிவிட
இன்பத் தமிழில் இடமில்லைப் போதியளவென
அறிஞர் ஒதுங்கினரோ என்ற ஐயம்
ஓரிடத்தில் அழகு இருந்து விட்டாலோ
ஒற்றுமை குலைந்துவிடும் மனுக் குலத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

சிந்தனையாற் சிறப்பது மனத்தெளிவு - அதை
நிந்தித்தால் நேர்வது மன நெளிவு
உந்திடும் ஆசையளிப்பது துன்பம் - இதை
தந்திரமாய்த் தடுத்துவிட்டால் வருவதின்பம்

மனிதனைப் பற்றுவது மமதையோடு ஆணவம் - தீதென
மனதில் எண்ணும் போதிலது அறிவுப்பக்குவம்
சினமதைச் 'சீ' யென வெறுத்திட வாழ்வு சொர்க்கம்
தினந்தோறும் அமைதி நிற்கும் அவர் பக்கம்

மணமிகு மலர் பல கனியாகும் - கனிந்து
மணம் நிறை சுவை உருவாக்கும் - சில
பணமிகுந்திடும் குடும்பம் கர்வமாகும் - கர்வமாகி
குணந்தனில் பல மாற்றம் உருவாகும்.

தொட்:டதும் துன்பம் இறைவனை நினைக்கும் மனிதா!
மட்டற்ற செல்வம் மனையில் வந்தால் -வீழ்வாய்
கட்டுக் கடங்கா களிப் பெருங் கடலிலே ; கருத்தினைத்
தட்டி தத்துவப் பொருளை நினைத்திட நேரமுண்டோ?

அன்பினாற் பிறப்பது பாசம் - உண்மை
மன்பதைக்கிது ஓர் கவசம் கண்டீர்!
வன்பில் வருவது வீண் அலைச்சல் - இதை
உன்னிடும் மாந்தர்க்கு இன்ப ஆட்சி

காதலை நினைத்தால் கருத்தினில் இனிமை
மோதல்கள் வந்தால் இல்லை மேன்மை
பூதலத்தில் காதலின்பத்துக்கு இல்லையெல்லை- அதே
காதலால் வந்த கஷ்டத்துக்கும் கரையில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேளீரோ !

முதுகென்பற்ற உயிர்ப் பிராணி
மேதினியில் ஓர் அற்பம் காணீர்!
வெது வெதுத்த வெயிலில் இதன் திராணி
வெட்டென அடங்கிடும் கோணி
பதுமை போலிருக்கும் அதன் மேனி
பூமியில் அதுவோர் புதுப்பாணி
இதுவோர் செய்தி! மனிதருக்கும்
இதற்கும் ஒப்புண்டோ பார் நீ!

நிலத்திற் சில பிராணிகள் நிமிர்ந்து
நடப்பதற்கே தான் முதுகெலும்பை
வல்லான் படைத்தான் வகையறிந்து
வாயற்ற ஜீவன்களாய் பாரீர்!
வல்லமையற்ற முதுகென்பற்ற பிராணி
வாய்பேசுமோ? நிமிர்ந்து நடக்குமோ?
நல்ல மனிதர்கள் நன்னெறியினின்று
நழுவுதல் என்றும் கண்டீரோ?

பயனற்ற சொற்களைச் சொல்லக் கூசி
பின்னிற்போர் பெரியோர் கண்டீர்!
கயமை யாவும் களைந்து கருத்துணர்ந்து
கற்றறிவிற் கேற்ப நடப்போரைத்
தேயம் புகழ்ந்து போற்ற, அவர் செய்கை
தோன்றிடும் பிழையென சிற்றறிவாளருக்கு
நயமற்ற சொல் நவில்வோர் தன்மை
நாய் மதியினை நோக்கிக் குரைப்பது போலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றுவிடு!

போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரி உன்னைத்
தூற்றுவார் தூற்றட்டும் தொடர்ந்து செல்மின்!
சுற்றியுள்ள துயர்தனைக் கண்டு துவளாதே
வற்றாத வலிமையுடன் விரைந்து செல்மின்!
ஏற்ற மிகு இலட்சியத்தின் எல்லை நோக்கி
தோற்றாலும் ஓர் நாளில் வெற்றி நிச்சயமே.

சாற்றுகின்ற உபசாரத்தில் உண்டு விஷம்
கற்று விடு! ஒருவரைக் கால் முதல் தலைவரை
சுற்றம் போற்றுவோர் துயர் சூழ்ந்த வேளை - எம்
உற்றவனா? நீயென ஒதுங்கிடுவோர் மறவாதே!
காற்றில் எற்றிச் சென்றுவிடும் சருகு போன்றே
போற்றிடும் பொருள்களும் பறந்துவிடும்

மாற்றிடுவர் உன் மனத்தை வஞ்சகத்தால்
கூற்றமென அவர்களை விலக்கி நட!
தோற்றமதில் பாவிபோலுள்ளோர் தமை - உம்
ஆற்றலால் அறிந்து அகன்று விடு! அப்பாலே
ஏற்பவன் போல் நடித்துவிடு வஞ்சகனுக்கு - ஆனால்
தோற்று விடாதே! துணிந்து நில் காரியத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை தாழ்த்தல்

காரியமாய் அவசரத்துடன் சென்ற போதில்
கடன் கொடுத்தோன் எதிர்ப்பட்டால் கடனாளி
கூனிக் குறுகி ஒடுங்கித் தலை தாழ்த்தல்
கூட்டத்தொடு கூட்டமெனச் சென்ற போதில்
கும்பிடுவது போற் தலை தாழ்த்துகிறாரே - அவர்
கூட்டான ஆதரவு கேட்கும் தேர்தல பேட்சகர்.

பெருங்குடி மகனெனத் தன்னைச் சொல்பவனுக்கு
பகுத்துவிட்ட வகுப்பால் ஒருவன் தலை தாழ்த்தல்
வயிறு முட்டக் குடிக்க நீரென மதுவளித்த
வாடிக்கை வியாபாரிக்கு சீமானின் தலை தாழ்த்தல்
பதவி தருவேனென்றே லஞ்சம் வாங்கியவருக்கு
பதவி எதிர் பார்ப்போனின் நம்பிக்கைத் தலை தாழ்த்தல்

முதலாளியின் விரலசைவைப் பம்பரமென வோடி
மரமொத்த மனமுடை முதலாளிமார்க்கே
உழைக்குந் தொழிலாளியின் தலை தாழ்த்தல்
ஆபத்தில் உதவியவர் வழியில் எதிர்ப்பட்டால்
ஆர்வமுடன் ஒரு செய்ந்நன்றித் தலை தாழ்த்தல்
ஆயிமாயிரம் தலைதாழ்த்தல் வாழ்க்கையிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தமர் தானா?

ஊரை ஏமாற்றி ஊருக்குழைப்பவர் போல்
எத்தனை பாசாங்கு மனிதரடா!
தரணியில் இப் புதுமை கேளடா!
தாங்க முடியவில்லையே இந்நிலையை
மாரி யென இன்பக் கதை மொழிந்து
மடக்கிடுவர் தம் வாய் வல்லமையால்
பூரிப்பை உளமடையப் பேசிடுவர்
பகட்டாக நுனிநாக்கில் நஞ்சுடனே.

பணத்துக்கு ஏங்கித் தவமிருந்து
பண்பாட்டை உதறித் தள்ளியே
கணம் சும்மா இருக்கமாட்டார் - அவர்
கருத்துக்கள் மின்விசிறிபோற் சுழர
குணமெனுங் கைங்கரியத்தை மறந்து
குழிதோண்டிப் புதைத்திடுவர்
பணம் பணமெனத் தவிப்பதால் -என்றும்
படுக்கை நோக வருந்துவர்

நெஞ்சத்தில் நஞ்சை வைத்தே - மனம்
நெகிழ நெகிழப் பேசிடுவர்
வஞ்சகமே யுருவாகக் கொண்டு
வம்சத்தைக் கெடுக்கும் மாந்தரிவர்
கொஞ்சமேனும் ஈவிரக்கம் இன்றி
கபடமற்ற உளமுடையோருக்கு
கஞ்சத்தனத்தால் நாக்கூசும் - வீண்
கதைகளாற் பழி சுமத்துவதேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பற்ற நாவினைக் கொண்டு
நயமாகப் பல மொழிகள்
உரமாகப் பேசிடுவோர் கணம் -நல்ல
உத்தமர்கள் செய்கை போல்
மரமொத்த நெஞ்சுடையோருக்கு- நல்
மனம் பண்பு பாசம் எதிரிகளே
தரங் கெட்ட இம்மனிதரை நினைக்க
தீயென நெஞ்சம் எரிகின்றதே.

## அலைச்சல்

பணத்தைப் பல கட்டாகக் கட்டி
கணம் கணம் கணக்கு வைப்பர்
திண்ணிய பெட்டியிற் தேக்கி வைத்தே - அப்
பணத்தினைக் காப்பதில் மனவலைச்சல்

தெருவோரம் தஞ்சமென்றிருந்து - சிலர்
வருந்தியே கழிப்பர் தம் வாழ்நாளை
கருகி வயிறு காயாமல் இருப்பதற்கே
ஒரு காலணாவுக்கு தினம் நாயலைச்சல்

கருத்தொருமித்த காதலருக்குச் சோலையில்
வருத்தமின்றி நடந்த சந்திப்பு நான்கு - பின்பு
வருவேன் என்றவள் வராது போகவே - அந்த
அரும்பு மீசைக்காரனுக்கு மனவலைச்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்புக்கு என்றே பணம் பல இறைத்து -பின்
முடிந்த பரீட்சை முடிவுக் கேங்கி யேங்கி
கிடைத்த போதும் திறமைச் சித்திகள்
தேடியே வேலைக்குத் தினமலைச்சல்

நடுத்தர செல்வத்தில் வாழ்ந்துவிட்டால் - தமக்கு
அடுத்த இனமாம் ஏழையை நோக்கார்
மாடி வீட்டின்பத்துக்கு ஏங்கியே - நிதம்
நெட்டுயிர்ப்பர் வீணாசை அலைச்சலால்

வலையெனுங் காதலிற் சிக்கிய காளைக்கு
வாலைக் குமரியவள் வயப்படாது போகவே
காலை மாலை எனும் பேதமின்றி -அவனுக்கு
அலையென ஆர்ப்பரிக்கும் மனவலைச்சல்

## போராட்டம்

வேளையுணவுக்கு வகையில் யெனில்
வெயில் காயும் ஏழைக்குப் போராட்டம்
பருவந் தவறி மழை பெய்துவிட்டாலோ
பாட்டாளி வாழ்க்கையிற் போராட்டம்
மங்கையவள் வாழ்வில் முதற் பேற்றின் காலை
மனதிலே ஆணா? பெண்ணா? என்ற போராட்டம்
அலைகடல் மீது வலை வீசுபவன் வாழ்வு
அக்கரை சேரும்வரை உயிர்ப் போராட்டம்
பங்களாவில் பத்திரமாய்ப் பணத்தைப் பதுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பதில் செல்வனுக்கு மனப் போராட்டம்
ஓடு மீன் ஓடி உறுமீன் வராவிட்டால்
ஒற்றைக் கால் கொக்குக்குப் போராட்டம்
ஏழைக் கன்னிப் பெண்களிடையே வரனுக்கு
ஏற்ற சீதனமின்றி வாழ்க்கைக்குப் போராட்டம்

கள்ள வியாபாரியிடம் பரிசோதகர் புகுந்தால் - அக்
கருமிக்குப் பதற்றத்தால் மனப் போராட்டம்
தத்தித் தத்தி அடி வைக்கும் இளங்குழவி
தளிர்நடை போடுகையிற் கால்களிற் போராட்டம்
சத்திர சிகிச்சையின் போதில் ரணவைத்தியன் - தன்
செய்கை வெற்றி பெறும்வரை மனப் போராட்டம்
நெருங்கிவரும் கல்யாண நாளைஎண்ணி
நேயமுடைக் காதலர்க்கு களிப்புப் போராட்டம்

## இடமுண்டோ நிம்மதிக்கு?

அலையாட கடலாட அதன்மீது
படகாட வலைவீசும் கரமாட
திடமாக மனம் களித்தாட - அவனது
வாடா மழலையின் முகம்
படமாக நினைவுத் திரையில் நீண்டோட
விடவா உனை நான்? என மீனைப்
படகினிற் பிடித்துப் போட
நடந்தன நிமிடங்கள் மணித்தியாலமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகக் கரையிலே பலர் உரையாட -அவன்
கடகடவென பிடித்த மீனைப் பரப்பிவிட
மடமடவென மீன்கள் கைமாறக் காசும்
கிடைத்தவுடன் கடைக்கு விரைந்தோடி - பின்
அடம் பிடித்த பையனுக்கு அமுதூட்டிய
மடமாது அவன் இல்லக் கிழத்தி
மட்டற்ற மகிழ்ச்சியுடன் உணவளித்திட - அவனுக்கு
கடந்தது அன்றைய பொழுது நன்றே

கிடந்தனள் மட்தரையினிலே சோர்ந்து
உடலினிலே உணர்வு பொங்க - அவன்
உடை கலைந்த மனைவி நோக்கி
தடம் புரண்ட தன்னுணர்வுடனே
தடையற்றுக் கலந்திட்டான் அங்கே
கிடைத்த சுகம் அவனுக்கிது வொன்றே

மடை திறந்தோடும் நீரில் நித்தம்
படர்ந்த அவன் வாழ்வில் இதற்கு
கிடையாது ஏதும் தடை அவனுக்கு
அடைத்து விடக் கருக்கதவை - இன்னும்
கண்டறியான் வழிவகை யொன்றும்
திடமாகத் துடுப்புடனே அவன் வாழ்வு
நடக்கிறது நாளாந்தம் இவ்வாறு
இடமுண்டோ இவன் நிம்மதிக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞருள்ளம்

இன்பம் பொங்கிட இப்பூமி தனிலே
இதமாக வாழ விரும்பும் மானிடம்
துன்பம் தோய்ந்திட்ட வாழ்க்கை தனைத்
தீதென வெறுத் தொதுக்கிடுவர் - இம்
மானிடர் வாழ்வில் நினைத்ததைச் செய்யும்
மிடுக்கு வாய்ந்தவை இளைஞருள்ளமே
இவ்வுலகில் எதனையும் செய்தே முடித்திட
இயல்புண்டே இவ்விளைஞர் கூட்டத்துக்கு.

துடுக்குத் தனமும் துள்ளும் இதயமும்
திடீரெனக் கொப்பளிக்கும் உணர்ச்சியும்
சேர்ந்த இடம் தான் இளைஞருள்ளம்
செய்வன எவையென அறியத் துடித்து
செய்திடுவர் தம் இளவுதிரத்தினாலே
இளைஞர் தம் உள்ளம் புரட்சிகள்
ஊற்றெடுக்கும் இமயமலைச் சாரல்

நாட்டில் யாவரும் நலம்பட வாழ
நான்வேறு நீவேறு எனும் பேதமின்றி
கச்சிதமாய்க் காரியங்கள் முடிக்க
கருத்தினிலே கொள்கையை நிலைநிறுத்தி
வானிலே அடுக்காக மின்னிவிடும்
வசீகரிக்கும் மின்னல் என எண்ணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பல தோன்றிடும் இளைஞரிடத்தே
பூதலத்தில்இவர்களது சிருஷ்டி பாரீர்!

கண்ணிமாய்க் கருத்துடனே யாவுக்கும்
காரணத்தை முன்னிறுத்தி திடீர் முடிவை
கேட்டு நிற்பர் சிந்தை திருப்தி பெற
உடன் புரட்சி இளைஞர் அவாவாம்
ஊக்குவித்தல் அவர் தம் நோக்காம்
வகை வகையாய்க் கருமம் நிறைவுற
வளர்ந்து வரும் சமுதாயத்தில் - இள
வீரமுடையோர் சேவை ஆணிவேரே.
இளைஞருள்ளம் பக்குவப்பட நன்கு -மேலும்
இணையவேண்டும் பொதறிவோடு நூலறிவு
தீர யோசிக்காத முடிவு நாடும் உள்ளமின்றி
தேர்ந்த நற்சிந்தை வளம் வேண்டும்
கூட்டுறவாய் நாட்டுக்கு உழைத்து
குடும்பமதில் குதூகலத்தை வரவழைக்க
பண்பட்ட இளைஞருள்ளந் தான் - தீவிரமாய்
பாரினிலே பவனி வரவேண்டும் பாரீர்!

தோளோடு தோள் சேர்த்து நாம்
தோழர்கள் போல வாழ்ந்திட வேண்டும்
வீணான பேதங்கள் விலகிடவே இன்று
வாலிபங்கள் கூடவேண்டும் ஒற்றுமையாய்
இனப் பகைகள் ஏதுக்கு நமக்குள்ளே
இணைந்திடுவோம் புதிய வாழ்வை நோக்கி
மலையென வருந்துயரை எதிர்கொண்டு
மகிழ்ச்சியுடன் வாழ்வது அவர் கடனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசித்திரவண்டி

வாழ்க்கை வசிதியுடையோருக்கு இன்பப் பொய்கை
வளமற்று வாழ்வோருக்கு ஒரு போர்க்களம்
சிந்தையினிலே நிறைவுண்டானால் சிறந்த வாழ்க்கை
'சீச்சீ' என்ற வாழ்க்கை நிம்மதி யிழந்தோருக்கு
துன்பம் எனும் வறுமைக் கோடுகள் வாழ்க்கையில்
துடுக்கற்ற கப்பலைப்போல் அலைந்திடுவர் வாழ்விலே
வகையான வசதிகள் யாவும் பெற்றுவிட்டால்
வாழ்க்கை ஒரு பொற் தேர் சிலருக்கே.

வாழ்க்கை யென்பதோர் விசித்திரங் கண்டீர்!
வையகத்திலதன் அற்புதங்கள் கேளீர்!
வீதியிலே வெயிலில் வாழ்வது ஓர் வாழ்க்கை
விசிறியுடன் மாடியில் வாழ்வதும் ஓர் வாழ்வு
பசியுடன் போராடிடும் வாழ்க்கையும் ஒன்று
குஷியுடன் வாழ்க்கையில் களியாட்டமும் உண்டு
ஏமா றுவோருக்கு அது விரக்தி வாழ்க்கை
வாழ்வு என்பது வெறுங் கனவே சிலருக்கு - அது
வசந்தம் மலிந்த கொள்கலம் மற்றோருக்கு.

வாழ்க்கை எனும் வண்டியிலே பேதங்கள்
வழுக்கி விழுபவர் சிலர்; வன்மையாகப் பற்றுவோர் பலர்
எத்தனை அறைகள் அப்பெரும் வண்டியிலே
ஓரறையிற் பணக்காரர் அடுத்தறையிற் பரதேசிகள்
இவற்றைவிட இன்னொன்றில் இரக்கமற்ற கல் நெஞ்சர்
அதோ! அவ்வறையில் அங்கவீனக் கும்பல்
அதற்கப்பாலே ஏமாற்றி வாழும் நயவஞ்சகர்
பக்கத்து அறையில் ஏங்கித் தவிக்கும் கும்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையை மேலே விட்டால் அவ்விடத்தே
பார்த்திருக்க உண்ணும் வயிறு புடைத்த சீமான்கள்
பல்லிளிக்கும் பாசாங்குக் கூட்டம் தனியறையில்
வல்லான் இறைவனெனும் நற் சாரதியே - இப்
பல்லோர் சுமை வண்டியை இயக்குவது பார்!
உள்ளாரும் அல்லோரும் மற்றோரும் கூடிட
ஊர்ந்து செல்வது இந்த விசித்திர வண்டியே.

## ஏன் இருக்கிறார்கள்?

சங்கம் மூன்று வளர்த்த தமிழ் - எங்கள்
சிந்தை மலர்ந்த இனிய தமிழ்
மங்கா வனப்பும் மாறாவிளமையும் கொண்டு
மேதினி போற்றுகின்ற கன்னித் தமிழ்
ஓங்கும் காதல் வீரமென போரெனவே
ஆதரவுற்று வளர்ந்தன தமிழிலக்கியத்தில்
தங்கள் மானமும் உயிரும் ஒன்றெனவே - அவர்
உள்ளத்தில் தெளிந்தோடும் ஊற்றாகும்

மறக்குலத்தில் எழுந்த பரம்பரை என
மார்பு தட்டும் தமிழர் பரம்பரை
பறக்கவே மானத்தை காற்றில் விட்டே
பதுங்கி வாழ்ந்திடாத வீரர் குலம்
அறத்தையே என்றும் பெரிதெனப் போற்றி
ஆற்றும் வகையையே இலக்காக
புறத்தே தீங்கு நேராமல் போற்றிப்
பேணும் மறக்குலம் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குலந் தன்னை இழிவாக்க - இன்று
உதித்ததோர் குலம் கோழைப் பட்டாளம்
எக்காளங்கள் கொட்டி வாய் வீரம் பேசி
அவப் பொழுதாய் நாட்களைக் கழிக்கும்
மக்கள் செயல்தான் யாதென்றால் - ஒரு
மனிதனுக்கே அவர் அடிமைப்பட்டு
வக்கணங்கள் பல பேசி வீட்டிலே வீரம் புரிந்திட ஒரு
வாய்ச் சோற்றுக்கு அடிமையாகும் நிலையேனோ?

நல்லது கெட்டது தானறியார் நாளும் -தம்
நாக்கு ருசித்து வயிற்றை வளர்ப்பதற்கே
பல்லிளித்துப் பல சேவகங்கள் செய்து
பன்றியிலும் கீழாகப் பாரோர் மதிக்க
கல்வியை வருந்தியே அரைகுறையில் கற்று
அரட்டையடிப்பர் விதண்டா வாதங்களை
சொல்லால் பந்தர் போடும் இவ்விளைஞர்கள்
இல்லாத நிலை என்று உருவாகும்?

வாய்ப் பேச்சில் வீரசாகசம் புரியும்- இவர்
வன்மையைத் துருவிப் பார்த்தால்
தாய்மையில் ஊறிடும் வீர நரம்பிலே சிறு
தன்மையின் விதமும் அவர்களுக்கில்லை
பாய்கின்ற ஆற்றின் சலசலப்புப் போன்றே
பாய்ந்தோடி நேருக்கு நேர் பொருத-பண்டைச்
சேய்களின் மறக்குலங் கெடுத்திட்ட
மக்களிவர்கள் கோடரிக்காம்புகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தங்கள் பல பிடித்து தம் நலத்துக்காக- வெண்
சாம்பருக்குள் மறைந்துள்ள தணல் போல்
சிந்தனையற்று மறைந்துள்ள கோழைகளை
சிந்தித்து இனங் கண்டிட வேண்டும்
தந்திரத்தால் வஞ்சனை பல செய்தும்
தம் மனம் ஆறாது தவித்தவராய்
பந்துக்களைக் காட்டிக் கொடுக்கும் - இப்
பாதகர்கள் ஏன் இருக்கிறார்கள்?

## ஏனோ இத்தவிப்பு?

விலைவாசி ஏறுகிறது விஷம் போல - இனி
சிலைபோல் நிற்பதாற் காணோம் பயனேதும்
கலையாத உடையை விரும்பி நிற்குமிந்த
மலைப்பை நீக்கிடுவோம் விறுடனே.

அலங்காரமென்று சொல்லி வீணேயின்றுசிலர்
சில வினைகளாற்றிடுவர் தப்புத்தப்பாகவே
பலனுண்டு அதிலெனப் பணத்தைக் கரைத்து
குலங் கெடுக்கும் செயலிலும் இறங்கிடுவர்

கருமையொடு நல்லழகுடன் இருக்கும் - இந்த
சுருட்கம்பி போன்ற கருமுடியை மேலும்
வருந்தியே திருத்தி வேறு வினைகளற்று
இருந்திடுவர் அரைமணி கண்ணாடி முன்னே

வேண்டாத புசல் மாவை முகத்திலப்பி
ஊனை வெறுத்தும் அலங்காரம் செய்து
காண்போரின் கவனத்தை ஈர்த்திட எண்ணும்
வீணர்களின் செயலை என்னென்பது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயமே மெய்யென்று எண்ணி - சிலர்
கோயிலையே வெறுத்து ஒதுக்கிவிட்டே
பாயதிற் படுத்திருப்பதேனோ? நம்பலமுண்டு -என
நியாயங்கள் பலவாறு பேசிப் பேசியே

வைரத்துக்குள்ளிருக்கும் வைரம் போன்றே
கைவரப் பெற்றது எமது வாழ்க்கை யிங்கே
மைவிழியாளொடு கூடிக் களித்து அனுபவிக்கவே
வையக மீதினில் வந்துதித்தோம் எனச் சிலரே.

காற்றடைத்த பையென்பது பொய்யடா!
போற்றும் உடம்பென்றும் மெய்யடா!
கீற்று மின்னல் போலன்றி என்றும் நிற்கும்
ஊற்றென பூவுலகில், புரியாது வாழ்வர்

நிலையாமை வாழ்க்கை என்றே உணர்ந்திடாது
தலைமுறை மரபுகளை மறந்தே பறக்கவிட்டு
அலைந்து தேடிடும் இன்ப மெனும் துன்ப
வலைக்குட் சிக்குவதற் கேனோ இத்தவிப்பு?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்புக்கள் பலவிதம்

இறைவன் படைப்பிற் பற்பல உண்டு -அதனால்
கறைகள் நிறைந்த விந்தை உலகமிது
மறைகள் நெறிவகுக்கும் மனுக்குலத்தின்
குறைகள் களைந்தால் ஒளிரும் வாழ்க்கை

சாலைகள் நிறைந்த வீதியோரத்தில் -தினம்
காலையும் மாலையும் கடுந்தவமிருந்து
வேலையிது வென இறைவனை நொந்து
காலை நீட்டிக் கதறுவர் காற்பணத்துக்கே.

அங்கமதிற் சிலதைப் பறித்தெடுக்கும் -ஆகாய
கங்கையைச் சடையிற் சூடியோன் உளமென்னே!
எம்கையே எமக்குதவி என்றிராமல் தவிப்புடன்
ஏங்கி மற்றவர்கை பார்ப்பதுதான் நியதியா?

வேறுபாடுகளான அங்கமொடு மனுக்குலத்தில்
மாறுபாடுடைப் பிறவிகள் தோற்றமேன்?
ஆறறிவுள்ள இம் மானிடப் பிறப்பின்
வேறுபட்ட உள்ளங்களோ மிகக்கொடுமை.

ஒருவேளைக் கஞ்சிக்கு வழி தெரியாது
வருவோர் போவோரை விழித்து நோக்கி
கருமங்கள் நிறைந்த பாவிகள் நாமையா! - உம்
திருக்கையால் சில்லறை தாருமையா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறிக் கதறும் இப்பிறப்பின் அலறலைக் கேளாமல்- தம்
மனக் கோவிலில் பாறாங் கல்லை இறுக்கி வைத்து
உனக்கேனோ? காசென்பது போல் கேட்டு
வனப்பு வதனத்தை திருப்புவர் அப்பாலே.

பகுத்தறிவுள்ள பண்புடையோரென - தம்மை
வகுத்திடுவர் ஏனைய உயிர்களிலும் வேறாய்
உகுத்துக் கண்ணீர் வடிப்பதைப் பார்த்தும்
பகுத்தறிவின் மறைவுதான் விந்தை.

மீதி யிடமின்றியே வயிறுமுட்டிடப் - பல
சாதியுணவுகள் பற்பல தின்று மகிழ்வோர்
வீதியோரம் விசனித்திருக்கும் - தன்
சாதியினை ஓர் கணம் கருதார்

இப்படிக் கொத்த கன்னெஞ்சகளுடன் -புவியில்
எப்படி ஏழைகள் காலங் கழிப்பது?
இப்புவி வாழ்க்கை இனி வேண்டாம் -மீளவும்
தப்பித்தவறியும் எமைப் படைத்திடாதே இறைவா!

ஆடையணிகளுடன் வேண்டியவை நுகர்ந்து -பலர்
மாட மாளிகையில் வாழ்ந்திடும் போதில்
வீடே நிகர்த்த நிழல்மரங்களின் கீழே
வாடி வதங்கிடுவோர் நிலைதனை அறியார்

நாகரிக மென்று சொல்லியே நாளும் -பல
தாகமுற்றே போகப் பொருட்களிலும் வெளித்
தேகத்தை மினுக்கவும் முயன்றிடுவர்
சாகவிருக்கும் மற்றோர் நிலையுணரார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன சோதனையோ?

படைத்துப் படைத்து ஓய்வின்றி உனக்கு - நம்
பாங்கைப் புரியாமல் கூத்தடிக்கின்றீர்!
விலைவாசி ஏறிவரும் நாளையிலே - இறைவா!
வேடிக்கைச் சோதனையோ? இது என்ன?
சனத்தைப் பெருக்கச் சித்தம் கொண்டீர்- அவர்க்கு
சாண் வயிறு உண்டென்பதை மறந்தீரோ?

ஒருவேளைச் சோற்றுக்கே வழியில்லை - இன்னும்
உயிர்க் குலத்தைப் படைப்பதேனோ?
நானும் பல தினங்கள் கவனித்தேன் - இது
நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றதே
வேடிக்கை யென்று நீர் எண்ணி விட்டீர்!- இதை
வீணே எம்மிடம் காட்டுகின்றீர்.

கால் வயிற்றுக் கஞ்சிக்கே வழியின்றி - நம்மில்
கையேந்தித் திரிபவர்கள் கணக்கில் இல்லை
தாய்முகம் நோக்கும் பிஞ்சுப் பாலகனையும்
தெருவோரம் குந்தியுள்ள வறுமை நோயினரையும்
பார்ப்பதில் இன்பம் உனக்குப் பல உண்டா?

எத்தனை நாளெனப் பொறுத்திருப்பது?
அத்தனைக்கும் முடிவுதான் கூறிடுவாய் - உன்
படைத்தற் தொழில் வன்மையைக் காட்ட
பாவிகள் எம்மிடமா துணிந்து விட்டாய்?
ஈவிரக்கம் என்பதை மறந்துவிட்டாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எம்மை வறுமையில் ஆழ்த்துகிறாய்
வன்மையை எமக்குக் காட்டிட உனக்கு
வகையான தருணம் இதுவோ? வினைகள்
வேறு உனக்கில்லையா? இறைவா!
வேண்டாம் இனியிந்தச் சனப்பெருக்கம்.

ஈடு கொடுக்க முடியாது எம்மால்
எமது இன்னலை ஒருகணம் நோக்கி
படைத்தற் கருவிகளை ஒருங்கே வைத்து - உன்
பிள்ளைகளைக் காப்பாற்று இறைவனே!
மீண்டும் பிறப்பு உண்டானால்
மேலவனே வறுமை நீக்கிப் படைத்துவிடு!



## ஜனனம்

பத்துமாதச் சித்திரமொன்று ஜனனம்
பக்குவமாய்க் கொடுத்த குரல் இனிய கானம்
ஒன்று இரண்டு மூன்றுடைப் பராயம்
உறுத்தும் கவலைகளில்லை மனதிலப்போ
நான்கு ஐந்தாறுப் பராயந் தன்னில்
நாளும் சிற்சில ஆசைகளின் அரும்பு
ஏழெட்டு ஒன்பதோடு பத்து அகவை
எழுப்பிவிடும் பிரச்சினைகளின் சாயலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தைக் கடந்துவிட்டால் பற்பலவகையில்
பற்றிப் பிடித்துவிடும் ஆசைகளின் உதயம்
சொல்லமுடியா விருப்புகள் குறும்புகள்
சோதனை புரிந்து தோன்றும் பிரச்சினைகள்
எண்ணிரண்டு வயதினை எட்டிவிட்டால்
எண்ணத்தில் புதுப்புது உணர்வுகள் கருத்தினிலே
கால் நூற்றாண்டை வலிந்து கழித்துவிட்டால்
கனமான காரியங்கள் காத்திருக்கும் காலம்

இப்போ தொடங்கிய வாழ்க்கைச் சிக்கல்
என்றும் தீரா வாழ்வினிறுதி வரை வரும்
பற்பல பொறுப்பு குடும்பப் பாரம் மனுவுக்கு
பரிதாபம் இவ்வகவையில் அகப்படுவோர்
தரணியில் பொறுப்பு மிகுந்த நடுத்தரப்பருவம்
நடுத்தரப் பருவம் நகர்ந்து விட்டால் நாளும்
நாட்டங்கள் குறைந்திட வாழ்வில் வெறுப்பு

சுமந்த குடும்பத்தின் பொறுப்புகள் நீங்கிட
சுற்றி வீட்டைக் காப்பது இறுதிப்பருவம்
நாயைப் போன்ற நிலையை எய்திவிட்டால்
நாட்செலநாட்செல மீண்டும் குழந்தைநிலை
முன்னாளில் அவர் பாலப்பருவம் போன்றே
இன்னாள் அவர் இறுதிப்பருவம் அமையும்
முடிவில் ஓரிரு மாதச்சிசுவினைப் போல் வாழ்ந்து
அரனைத் தேடி அமைதிப் பயணம்
அடங்கி யொடுங்கி மயான ஊர்வலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்தான் நிலையாயுள்ளாரோ?

காற்றில் சிக்கிய கருகிய சருகென
காலமெல்லாம் அலைந்தோம் பலனில்லை
மாற்றம் வாழ்வில் வருமென்று மாய்ந்து
மாடாயுழைத்தும் பயனில்லைத்தான்
நேற்றும் அன்றும் எம்முடனிருந்த அன்னை
நொந்திறந்தாள் விடிவற்ற மனதுடனே
ஆற்றுப் படுத்த எவருமில்லை ஆண்டவனே
ஆர்தான் நிலையாயுள்ளாரோ? என்றனரே

எங்களுதிரத்தைப் பாலாகக் குடித்து
ஏப்பம் விட்ட உயர் சீமான்கள்
தங்கள் நலமே பெரிதென எண்ணி
தடைகள் போடுவர் எம்முயர்வுக்கே
பங்கம் பலவும் எமக்கீந்து பதைத்திட
பாவிகள் எம்மைக் கீழாய் மதித்த
சிங்கம் நிகர்த்த சீமானை செந்தூரப் பேழையில்
சுமந்து செல்வது பார்! அங்கே

ஊரை ஏமாற்றி ஊருக்குழைப்பவன் போல்
உத்தமனாகத் தோன்றிய மிராசுதாரர்
ஏரைப் பிடித்த பாட்டாளிகளை ஏமாற்றி
ஏழையவர் உழைப்பில் வயிறு வளர்த்தே
" காரைத் " தினம் துடைத்துச் சவாரி செய்து
" கசூரினா " பீச்சில் பொழுதைக் கழித்தவர் -இன்று
தோரணப் பாடையில் தூங்கிச் செல்கின்றாரே
தரணியில் யார்தான் நிலையுள்ளாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் நன்மையே நமதென்று எண்ணி
நாலுபேர் மதிக்க வாழ்ந்த உழைப்பாளி
விட்டாரை நேசிப்பது போன்றே அடுத்தோரை
வாஞ்சையுடன் போற்றும் வரகுணன்
சூட்டுகின்ற புகழ்மாலையைத் துச்சமாகச்
சாத்திவிடும் ஏழைப் பங்காளன்
பாட்டாளிகளின் பாசத்தைப் பாடையாக்கி
படுத்துச் செல்கிறான் :யார் நிலையாயுள்ளாரோ?

## மானிடச்சக்கரம்

உலக வழக்கம் இதுவென்றே கூற
உயிரினங்கள் தோற்றம் அதுவேயாக
உடலிரண்டு விரும்பியுறவு கொள்ள
உதித்தது கருப்பையில் ஒருமகவு
ஊரறிய உலகறிய உற்ற காலத்தில்
உலகுக்கு வந்தது மகவொன்று
உள்ளம் இரண்டும் கண்டு மகிழ
உயிரொன்று தோன்றியது மகளாக.

அங்கமது உருட்டி நிமிர்ந்து - இந்த
அவனியை உற்று நோக்கிட
காலங்கள் கடிதே விரைந்திட
குழந்தையவள் மெல்ல வளர்ந்தாள்
கனிச்சுவை சின்னவாய் காட்டி
கண்டவரைத் தன் குறும்பால் மயக்கி
பெற்றவளுக்குத் தாய்மையின்பம் அளித்து
பேறுகளில் அது முந்தி நிற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாண்டுப் பராயத்தில் பிள்ளை
அ ; ஆ படித்திடப் பள்ளி சென்று
ஆண்டு பல விரைந்தோட அறிவுடன்
இளமை போட்டியிட்டு உடலுடன் சேர
வேண்டிய யாவற்றையும் பெற்றிட
வருத்திப் பெற்றோரிடம் வாங்கியே மகிழ
புள்ளி மானென இல்லினிலே ஆரவாரித்து
பாவையவள் வளர்ந்தே வருகின்றாள்

இளமையின் சாயல் இணைந்து மெருகேற
இங்கித உணர்வுகள் மனத்திற் தோன்ற
பருவத்தின் தலைவாயிலில் எட்டிப் பார்த்து
பேதையவள் சுகம் தேடும் மேனியாகி
வாலிபக் கண்களுக்கு அருந் தேனானாள்
பேதையோ இளமங்கையாகித் தனக்குப்
பிடித்தவனையும் தேடிக் கொண்டாள்

அன்னவர் இணைந்த உறவில் - நன்றாய்
அள்ளியே பருகினர் பருவத்தேனை
ஐயிரு மாதங்கள் அரவமின்றிப் பறக்க
அன்னையானாள் அந்த இளமங்கை
அன்னையும் தந்தையுமாகிப் பெற்றோராகினர்
அந்த இளம் பருவச் சோடிகள்
வருடங்கள் வேகமாகப் பறந்திட
வந்தது பார் மூப்பும் நரையும்

வயோதிபத்துக்கு அப்பால் என்ன?
வரைந்துள்ளதோர் இறப்புக் கோடு
ஆடிய ஆட்டமெல்லாம் ஒடுங்கி
ஓடிய விரரத்தம் ஆமைநடையாக
காற்றடைத்த பை ஓட்டையானது போல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டில் உள்ள உயிர் பறந்த பின்பே -சுடு
காட்டிற்குப் போகும் சடலமாகவே
கற்றோர் கூறிடும் நிலையாமை இதுவே.

மண்ணிற் பிறப்பதுவும் இறப்பதுவும்
மறக்கமுடியா உண்மை பாரீர்!
இறந்தாலும் இறவாதவராக நிலைத்து
இப்புவி வரலாற்றில் இருப்பவரை
எண்ணிக் கூறிட ஏற்கும் உலகம்
ஏனையோர் பலரும் வாழ்ந்த சுவடே
இன்றிக் காற்றிலே பறந்தார் - அவர்
கற்பனையானார் காலவரலாற்றிலே

இறுதியாக ஒன்று உண்மை கேளீர்!
இச்சைகள் வெறுத்து தன்னலம் பேணாது
மற்றவர் நலமே தனதென்று எண்ணி உயிரை
மதியாத உத்தமசீலரோடு அறிஞரும்
தாய்நாட்டு விடுதலைக்கே தலைநிமிர்ந்து
தன்னுடல் குருதி சிந்தி உரிமைக்காக
மறவர் முன்னே மார்புகாட்டி இறக்கும்
மறக்குல வீர மைந்தர்க்கும் இறப்பில்லையே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது அருந்திவிட்டால்...

உலகமே சொர்க்கமெனத் தோன்றும் தோன்றும்
ஊராரின் கேலிகளும் ஒருங்கே தோன்றும்
பல்வேறு வாய்ப்பேச்சு பலமாய்த் தோன்றும்
பழைய எதிரிகள் புதிதாய்த் தோன்றும்
ஓலமென வாயினிலே பாடல் தோன்றும்
ஒளியினிலே அவருக்கு இருள் தோன்றும்
பலமது பறந்தோடிப் பலவீனந் தோன்றும்
பஞ்சாமிர்தமென மதுதனை யருந்தினால்

நடையினிலே ஒரு தள்ளாட்டம்
நளினமாய் இருக்கும் பார்ப்போருக்கு
உடை பாதி உடலில் ஈடாட்டம்
ஊர்ந்திடுவர் ஈரகவை மகவுபோல
இடைக்கிடையே வயிற்றுக்குப் போராட்டம்
" வாக்" என்று கக்கிடுவர் வாந்திதனை
கிடைத்த பொருட்களோடு சிறு உரையாடல்
கீழோர் மேலோர் பேதமறியாரிப்போதில்

வீட்டினுக்கே ஒருவாறு சென்றுவிட்டால்
விறுவிறுக்கும் ஏச்சுக்களின் உச்சம்
அட்டிலில் உள்ள பாத்திரங்கள் சில
அப்பாற் சென்றிடும் போதில் கலீர்ச்சத்தம்
பட்டினியாற் பாலகரும் பதிவிரதையும்
பாதிவயிற்றுக்குத் தினம் அலைச்சல்
குட்டிச் சுவராக்கும் இந்தக் குரூரமதுவினால்
குடும்பச் சீரழிவு நிதம் நிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவிலே சொர்க்க லோகத்தைக்
கண்டிடலாம் என்பர் சிலர்
அதுவின்றி என்னுடல் அசையாது என்பர்
அகௌரமாயய்ச் சில மனிதர்கள்
எதுவெது தேவையோ அதுவெல்லாம்
இந்த மதுமாதாவிடம் சித்திக்கும் என்பர்
ஈதென்ன ஆச்சரியம் இவர்பேச்சு
அடிமை மதுவுக்கே என்ற நிலைதான்

தன்னை மறந்தலயந்தன்னில் வைப்பது மதுவே
தரணியில் கண்கண்ட துக்கநிவாரணி இதுவே
உடல்நூல் வல்லாரும் வற்புறுத்துவர் சிலநேரம்
ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிப்பது இதுவே

மதுவினைத் தெய்வமென மதிப்போர் கூற்றிதுவே
மதிகெட்டார்க்கு எடுத்துரைக்க கூற்றிலையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது வந்தால்.............

ஆறுமாதம் உண்டதுபோல் உடம்பு
வெறுபட்டிருக்கும் கண்கள் காட்சியை
மாறி நோக்கும் நினைவு தடுமாறும்
சோறு கூட வெறுக்கும் இதுவந்தால்

பாயைத் தேடும் கண்கள் ஆவலாய்
நோய் கொண்டதுபோல் மெய் வாடும்
ஏய்''' என்ற குரலையும் காது கேளா.
சாய்ந்திடவே மனம் அப்போது நாடும்

வந்துவிட்டால் அது வந்துவிட்டால்
வையகமே சுற்றுவது போன்றிருக்கும்
வேலைகளில் அதி வெறுப்புக் காணும்
வெல்லமுடியாது இதை எவராலுமே

அதைத் தான் அழகாகச் சொல்வர்
அவனி மக்கள் அன்புடன் அழைத்திடும்
ஆதிசேடன் மேல் திருமால் நெடுநாள்
அயர்ந்து தூங்கும் நித்திரை என்பதாம்

நிம்மதி காணுவர் அவர் நித்திரையிலே
நினைத்தவை யாவும் ஒடுங்கியே அவர்
நீண்ட குறட்டை ஒலியுடனே
நினைவு தவறிப் பிதற்றுவதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுதனையருந்தாதே

இல்லினிலே இன்பந் தோன்றும்
இடர் யாவும் ஓடி மறையும்
சில்லென்ற தென்றல் அங்கே
சந்தோஷம் பரந்து வீசும்
எல்லோரும் நண்பர்கள் என்ற நிலை
எண்ணத்திலிருந்து வரும்
பல்லோரும் வெறுத்திடும் இந்தப்
பாழ்மதுவை அருந்தாவிட்டால்

முகத்திலே முறுவலுடன் மகிழ்ச்சியால்
மூழ்கிடுவர் மகிழ்ச்சிக் கடலிலே
அகத்தில் அறிவொடு அஞ்சாமையும்
அன்புணர்ச்சியும் வளர்ந்துவிடும்
சுகங்கள் யாவும் தோன்றிட வீட்டில்
திருமகள் விரும்பி நடம் புரிவாள்
சகம்போற்றும் வாழ்வுக்கிலக்கணமாய்
சிறக்கும் மதுவருந்தாதார் வாழ்வு

தன்னைத்தானே பொறுப்புணர்ந்து
தயங்காமல் உழைப்பர் வளம் பெற
என்னென்ன ஏக்கங்கள் சூழ்ந்தாலும்
எளிதாய்த் தேறிடுவர் விவேகத்தால்
தின்ன வகையில்லாவிடினும் நீங்காத
திருப்தி மனதிற் தோன்றுவது
தன்னையே மறக்கச் செய்யும் - மது
தன்னை யருந்தாதார் மனைதனிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையாள் சிந்தும் புன்னகையிலே
மதுவின் போதை தோன்றிடும்
சினம் நீங்கிய செம்மை வாழ்வுக்கு
சேயின் குரல் நாதம் ஒலித்திடுமே
தினம் திருப்தியொடு வாழ்க்கைத் தேர்
ஓடுவது அன்பெனும் அச்சாணியிலே
மனங்கலக்கும் மதுதனை அருந்தாவிட்டால்
மலர்வது இல்லறச் சொர்க்கமே

## பித்தானேன்

புள்ளிவண்ண மயில்மீது பூத்தமுகத்துடன் - வந்த
வள்ளி மணாளனன் அருளை அள்ளிப் பருகியே
கன்னி யிடையாள் வள்ளிக் குறத்தியை - அவன்
மென்ன அணைத்துள்ள கன்னத்தனங் கண்டு
துள்ளிய என்மனம் பொறாமைப் பட்டதே - அந்தக்
கன்னி வள்ளிநிலை கண்டு பித்தானேன்

அந்தி சாயும்நேரம் குந்தியிருந்தேன் மதகினிலே
சிந்தும் புன்னகையுடன் தோழியொடு வந்தவளை
சந்தி கூடும் இடத்தில் சந்தித்தன என் கண்கள்
சந்திர வதனத்தில் நற் சாந்தியைக் கண்டே
இந்திரனது இசைவுறு கன்னியருள் ஒருத்தியோ -என
சுந்தரி யவள் வனப்பில் பித்தானேன் நான்

கன்னங் குழிந்த சிரிப்புடனே வந்து
காட்சி தந்து களிப்பில் ஆழ்த்தியதோர் மழலை
சின்னச் செவ்விதழ் துவள சிங்காரமாகவே
சீரிய வீணையோசை போல் கன்னல் மொழிபேசிட
தெய்வப் பொலிவாம் அம்மழலை திறன் கண்டு
பாய்ந்தோடுங் களிப்பாற் பித்தானேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமதில் மறக்கமுடியாச் சுமையுடன்
மங்கையால் மதிகுழம்பி விதியிதென்று - நான்
ஏங்கியே ஏதும் செய்திட எண்ணிடாமல்
வீங்கிய மனத்துடன் வீடு சென்றபோதில் - அன்பு
பொங்கிய தாயின் வதனங்கண்டு பித்தானேன்
ஓங்கி வளர்ந்த பாசத்தால் அவளும் பித்தானாள்



## ஏமாறச் சொன்னது நானோ?

கவின் மிகு காலையில் பெற்றோருடன்
கூவிச் செல்லும் புகையிரதத்தில்
துன்பமின்றி இன்பமிகப் பெற்று
துள்ளியெழும் ஆசையில் எனை மறந்து
இயற்கைக் காட்சிகளைப் பார்த்தேன் - நான்
இன்ப மீதுரப் பெற்றவனாய்
வியத்தகு காட்சியில் மூழ்கியிருக்கும் போதில்
வலிந்து திருப்பியதோர் செய்கை.

அங்கிருந்த ஒருவர் செய்கை
இமை கொட்டாது பார்த்துப் பார்த்து
சிரித்தார் முறைத்தேன் பதிலுக்கு
சிவந்த என் வதனம் காந்தமென
கவர்ந்தது அவர் காதலுள்ளத்தை
கண்ணே! என்றார் கனிவாக
என்னே! வேணும் என்பது போல்
ஏறிட்டுப் பார்த்தேன் சினத்துடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாய் ! ஏனோ திகில் உனக்கு
பார்வைக்கு அழகான பொற்சிலையே
செப்பினார் பற்பல அன்பு மொழி
சிந்தையை மேலும் கலக்கிட என்னைப்
பெற்றோர் தனியே விட்டு ஆங்கோர்
பக்கம் சென்றனர் ஆவலாய்
ஏக்கம் மனதிற் குடியேறவே
என்னமுதே ! வா ! என்னருகென்றார்:

பழம் நழுவிப் பாலில் விழுந்ததென
பக்கத்திருந்தவர் என்னருகே வந்தார்
என்னை அள்ளியெடுக்க முனைந்தார்
ஆ என்றலறினேன் உதவியில்லை
எந்தன் கூக்குரல் அவர் காதில்
ஏனோ செவிடன் சங்காயிற்று
பெண்ணே! முத்தம் தா என்றார்
பிடியோ முதலைப் பிடியாக.

பக்கம் உள்ளோர் தனை மறந்து
பதித்தார் பற்பல முத்தங்கள்
முறுக்கிவிட்ட மீசைமுன் - என்
முகத்தினைக் கன்றிடச் செய்ததே
வயது அப்போ ஈ ர் நான்கிருக்கும்
வாஞ்சையில் அணைத்தவர் சித்தப்பாவே

சித்தப்பாவின் செயலிதனை
சிந்தை மாற்றி யோசித்த
பெரியீர் நீங்கள் இவ்விடத்தில்
பேதமை வயப்பட்டீரோ?
கற்பன கற்றுத் துறைபோந்த
கற்றோர்க்கும் உண்டு தவறிழைத்தல் - இங்கு
ஏமாறச் சொன்னது யாரோ?
என் மீது கோபம் ஏனோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கையுடன் சில வார்த்தை

யாழ்ப்பாணப் பட்டினத்து வீதியில் அன்று
வாழ்கின்ற மக்களின் வளம் கண்டு
பலாலி வீதியிலே பாதையோரம் நானிருந்து
உலாப்போகும் இளையோரை உன்னிப் பார்க்கலுற்றேன்
சூட்டியமலர் கூந்தலிலே சுடர்கொண்ட கண்ணானாய்
கூட்டுமெழில் எல்லாம் கொண்டவிளம் பெண்ணொருத்தி
குறு நகை காட்டி என்முன் வரலுற்றாள்.
நறுங்கமல வதனம் மலரக் கொவ்வையிதழ் திறந்து
வணக்கமெனக் கூறி வடிவாகக் கரங்குவித்தாள்
பிணக்க மேதுமின்றிப் பேதையழகில் மருண்டேன்
பூதல மோகினியோ வந்தவாறுரை என்றேன்

மங்கையவள் நளினமாய் வாய் திறந்து
அங்குற்ற செய்திதனை அழகாகச் செப்பலுற்றாள்
என்னூர் யாதென்று ஏக்கமுனக்கு வேண்டாம்.
நன்னெறி வளரும் திருநெல்வேலியே என்னூர்
பெற்றோர் ஆவலாயெனக்கிட்ட பெயர் பல்கலைக்கழகம்
உற்றாரெனை அழைப்பது " கம்பஸ் " என்று
கன்னி யென்றென்னை எண்ணிவிடாதே!
அன்னையாகிவிட்டேன் ஆயிரம் பிள்ளைகட்கு மேல்
மழலைகள் மகிழ்ந்து விளையாட மங்கை நான்
உழைத்து வருகின்றேன் உடம்பைப் பாராமல்
படித்துப் பட்டம் பெறவே நூல்நிலைய மென்ற
தடித்த புத்தகத்தினைத் தந்துள்ளேன் அவர்களுக்கு
" லெக்சரர் " என்ற வழிகாட்டிப் புத்தகத்தையும்
பக்கத்துணையாகப் பகிர்ந்து கொடுத்துள்ளேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பசியாற மணங்கமழும் " கன்ரீனை "
சிந்தை மகிழச் சேர்த்துக் கொடுத்துள்ளேன்
ஒவ்வொரு சிறாரும் ஒவ்வொரு துறையில் முன்னேற
எவ்வழியும் கடைப்படிப்பேன் அதை நிறைவேற்ற
கணக்கற்ற பிள்ளைகளை நான் பெற்று
பிணக்குற்றேன் பிழைவிட்டேன் இந்நாளில் - ஆனால்
என் குஞ்சுகளைப் பராமரிப்பதே என்வேலை
வண்ணமுடன் வளர்த்துவிட்டால் இன்பமெனக்கு
சின்னஞ் சிறார்கள் பொம்மை ஒன்று எங்களுக்கு
அன்னாய் ! தந்திடவேண்டும் என்றனர் ஆவலாய்
நானென்ன செய்வேன்? விலை குறைந்த காதல்
எனும் பொம்மையை ஏழையேன் கொடுத்துள்ளேன்

மழலைகள் முகத்தில் மகிழ்ச்சித் தாண்டவம் கண்டு
வீழ்ந்தேன் நான் இன்பக் கடலினுள்ளே
களைத்திட்ட பிள்ளைகளின் களைப்புத் தீர
களைகட்டிய நிழல்மரமெனும் சிற்றில் வீட்டைக்
கட்டிக் கொடுத்த பின்பே அவர் இன்பத்தை
எட்டிப்பிடிக்க முடியாதென்னால் இன்னும் கேள் !
வகையான புதுப்புது உணவு போல் இங்கு
வருகைதரும் அறிஞர்களின் பேச்சுணவை அளிப்பேன்
காலைதொடங்கி மாலைவரை கருத்துடனே நல்ல
வேலையைச் செய்யப் பழக்கிக் கொடுப்பேன் - நான்
அடம் பிடிக்கும் பிள்ளைகளை அழாதபடி பார்த்து
படம் என்று சொல்லிப் " பிலிம் ஷோ " வைக் காட்டிடுவேன்
பிள்ளைகளுக்குள் " ராக்கிங் " எனச் சண்டை வந்தால்
கன்னி நான் வாளாவிருப்பேன் அறிந்திருக்கட்டுமென.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்களின் வளர்ச்சி கண்ட எனக்கு
எல்லையற்ற இன்பத்தால் பெற்ற வயிறு குளிரும்
பலகலையும் பெற்று வாழவேண்டும் என்பதுதான்
சொல்ல முடியாத என் தவிப்பு
மிரண்டு வழிக்கு வராத குழந்தைகளை நான்
புரண்டழச் செய்வேன் பரீட்சைகள் வைத்து
எந்தன் வரலாற்றை இவ்வளவு நேரமும்
சிந்தையிலிருத்திவிட்டீர் இன்னுமுண்டு
அத்தனையும் சொல்ல அடியேனால் முடியாது
இத்தனை நேரமும் பிள்ளைகளை மறந்திட்டேன்
அம்மா ! எனவலறி ஊரை எழுப்புவர்
இம்மட்டுடன் நிறுத்தி நாளை இவ்விடத்தில்
பெரியீர் நீர் வந்துவிட்டால் மிச்சமுள்ள
வரலாற்றைப் பேசிடுவேன் உம்முடனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயறிவு ஊட்டிய பாடம்

களைப்பில் வந்தேன் வீடு திரும்பி
கட்டாயச் சுமைகள் எனக்கிருக்க
இளைப்பாறக் கண்கள் மேய்ந்தன
இருப்பதற்கோர் நல்லாசனம் தேடி
திளைத்த இன்பம் பெற்றிட மானிடர்
தொழிற்றுறை எத்தனை எத்தனை?
விளைவை நோக்கின் சமத்துவ
வாழ்வு காண்பது அரிதாகுமே

மனதிலெழுந்தவை பற்றிக் கணநேரம்
மனக்கணக்குப் போட்டுப் பார்த்தேன்
எனதெண்ணத்தை மாற்றியதொன்று - அது
எதிர் வீட்டுக் கன்றின் செய்கை
வனப்பு மிகுந்த இளங்கன் றொன்று
விழிதனை யுருட்டி செவிகளை உயர்த்தி
மனக்கவலையுடன் தன் பசியாற்றாமையால்
மாதாவைத் தேடிக் கலங்கியதே

ஆவின் கன்று தாயை எண்ணி
அலறியது சோகம் பொங்க
காவின் வழியே ஓடியாடிக்
காணமுனைந்தது தன்னன்னையை
பாவி அக்கன்று தன் தாயென்று
புளுகுடன் ஓடியது வேறோர் பசுவிடம்
தாவித் தாவியே தோல்வி கண்டு
திரும்பியது தொங்கிய தலையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுவத்தில் நின்ற கன்றுதான்
துவண்டு களைத்துப் படுத்தது
எழும்பிப் பார்த்தும் முடியாமல்
அழுது மீண்டும் உறங்கியது
தழுவிப் பால் அருந்திட தாயைக் காணாத
தயக்கமும் பசியும் சேர்ந்து
அழுத்தியது இளைப்புடன் களைப்பும் - உடன்
அக் கன்று சுருண்டு சோர்ந்தது

என் களைப்பை மறந்து நான்
எண்ணினேன் கன்றின் நிலையை
சின்னக் கன்று தானென்றாலும் - அது
சுதந்திரமின்றி காவலுடனுள்ளதை
எண்ணியெண்ணி உளம் நொந்து
ஆறறிவுடைய என் மனம்
கன்றுக்கு விடுதலை இருந்திருந்தால்- இப்போ
கடிதோடும் தாயைத் தேடியே

இளங் கன்றும் களைப்புடனே - பின்
எழும்பியது நுனிப் புல் கடிக்க
உளமுருகும் அக்கன்றின் சுறுசுறுப்பு
உனக்கில்லையா? என உறுத்த - என்
உள்ளம் எனைப் பார்த்துச் சிரித்தது
ஏளனம் நிறைந்த நோக்குடனே - பின்
மளமளவென என் காரியங்களை
முடித்திட முனைந்தேன் களைப்பகல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலாடக் கண்டேன்

கருநிறத் திரையில் பரவலாக வீசிய
நெருக்கமாய்ச் சிதறிய பொற்றுண்டுகளா?
கருவிழிக் கன்னியரைக் கண்டே கருத்தினில்
வருகின்ற வாஞ்சையோடு அணைத்திட முயலும்
துருதுருத்த இளைஞர் தம் கண் சிமிட்டலோ?
தருகின்ற இவ்வுரு தன்னை மீளப் பார்த்தால்
மருட்டுகின்ற மாயா ஜாலமெனத் தோன்றும்
இருட்டில் தோன்றும் காட்சி என்னே!

மெத்தென்ற கருஞ் செந்தூரப் பட்டிலே
வைத்துவிட்ட வண்ண மஞ்சட் புள்ளிகளோ?
பத்திரமாய்க் காத்துவைத்த தங்கப் பேழைதனை
நித்தம் இரவினிலே திறந்தன்ன காட்சியோ?
சித்தமதில் விந்தையை வரவழைக்கும் - வண்ண
அந்தரப் பந்தலாம் ஆகாயத்திலே இருள்
அத்தனையையும் அகற்றும் ஆயிரம் மின் குமிழோ?
எத்தனை தோற்றம் பார்ப்பவர் பார்த்துவிட்டால்

கார் கொண்ட மேகமதைக் கருத்துடனே
பார்த்திட்ட கானமயில் தன் துன்பப் பளு
தீர்ந்ததே இனித் திளைத்திடுவேன் இன்பத்திலென
கூரான தன்னலகால் கூவிக் களித்து
தீராத இன்பம் பலவும் எனக்களித்த
ஆராவமுதான இறைக்கு நன்றி கூறும்
ஆர்வத்துடன் ஆடிய காட்சி வானத்திற் கண்டேன்
அதுவே ஒளிர் நட்சத்திரங்கள் துலங்குகின்ற
அகன்றமைந்த வான்வெளித் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேணுவோம் மண்வளம்

உழுதுண்டு வாழ்வதிற் பழுதில்லைக் கண்டீர்!
பொழுதாக அலைவதிற் பயனென்ன கண்டீர்!
எழுத்தில்லை ஏர்முனையின் சிறப்புக் கூறிட
கழுத்திற் கலப்பையுடன் ஏகிடுவாய் வயலுக்கு.

நமது துணையே நம் துணை கண்டீர்!
தமர் பிறரென்ற வேற்றுமை யகன்றினிது
எமது வாழ்க்கை ஏற்றமுற்றுச் சிறக்கவே
மமதையின்றியே மண்ணை வளம் படுத்து!

மண்ணில் மறைந்துளதே பல செல்வம்
கண்ணியமாய்ப் பெறவே ஆவலுடன்
எண்ணித் துணிந்தே ஏர் பிடித்து
உன் பொருளனைத்தையும் ஆக்கிடுவீர்!

என்ன குறை கண்டீர் நம் நாட்டில்
வண்ணமுறப் பல வளங்கள் கண்டீர்!
வன்மைக்கு ஆபத்து சோம்பல் என நினைத்து
பொன் கொழிக்கும் நாட்டைத் தோற்றுவிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைகூட வேண்டும்

கூடித் தொழில் செய்ய வேண்டும்
குடும்பமதில் அமைதி வேண்டும்
பாடிக் களித்தே ஏர்க் காட்டில்
பக்குவமாய்ப் பயிரிட வேண்டும்
தேடிப் பல செல்வம் சேர்க்க வேண்டும்
தூயவழியிற் பெற்றிட வேண்டும்
வாடாதிருக்கும் முகம் வேண்டும்
வளங்கள் பல பெற்றிட வேண்டும்

இல்லாமை ஒழிய வேண்டும்
உண்டு சொல் எனும் சொல் கேட்கவேண்டும்
எல்லோரும் எல்லாம் பெறவேண்டும்
இழிகுணத்தோரை ஒதுக்கிட வேண்டும்
கல்வி மழை எங்கும் பொழிய வேண்டும்
காத்திரமாய் எத்தொழிலும் செய்யவேண்டும்
பொல்லாமை என்றும் நீங்கவேண்டும்
பீடுறுநிலை நிலைத்து வளர வேண்டும்

நெற்றி வியர்வை சிந்த வேண்டும்
நேரிதாகப் பயிர் செய்திட வேண்டும்
வெற்றிமேல் வெற்றி வர வேண்டும்
வீணர்கள் யாவரும் திருந்த வேண்டும்
ஏற்றமுறு வாழ்க்கை என்றும் வேண்டும்
ஏக்கங்கள் ஒழிதல் வேண்டும்
வற்றாத இன்பம் வேண்டும் எஞ்ஞான்றும்
வளர்மதியென நிம்மதி வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் அருள் வேண்டும்
ஏதுக்கும் அஞ்சாதநிலை வேண்டும்
வேண்டாத மோகம் ஒழியவேண்டும்
வேகமாக உற்பத்தி பெருக வேண்டும்
தீண்டாமை ஒழிய வேண்டும் - ஒரு
தாய் பிள்ளைகளாக வாழவேண்டும்
வேண்டுவது யாவும் கை கூட வேண்டும்
வாழ்க்கை சீரியதாய் அமைந்திட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்வதைக் கேளடா!

தாய்த் திருருநாட்டைப் போற்றுவோம் - தம்பி
தரணியில் அதன் புகழ் வளர்த்திடுவோம்
தீய்த்த கட்டுப்பாடுதனை நீக்குவோமடா! - நம்மில்
தீண்டாமையைத் துரத்தி விடுவோமடா!
தேய்கின்ற வளத்தினை மீட்போமடா! - கூடித்
தொழில் செய்து குதூகலிப்போமடா!
பாய்ந்து வரும் வெள்ளமென அன்பு கொள்ளடா!
பாசமிகு சோதரராய்க் காலந் தள்ளடா!

பஞ்சமென்ற பதத்தினைப் போக்கிடுவோம்
படிமிசை எல்லோரும் சமமடா தம்பி!
கஞ்சத்தனத்தையே கருவறுத்திடுவோமடா!
காலமெல்லாம் நேர்மையா யுழைப்போம்
வஞ்சனையாளருக்கு ஒரு குழி தோண்டுவோமடா! - தம்பி
வாழவிட்டால் அதை வளரும் மோசமே
தஞ்சமென்று வந்தவரைத் தாங்கிக் கொள்ளடா!
தயாள குணம் உந்தனுயிர் மூச்சடா!

உண்மைக்காக எதையும் இழந்து விடு! - தம்பி
எதற்காகிலும் உண்மையை இழக்காதே
கண்மணி போல் தாய்மொழியைக் காத்திடடா!
காய்ந்த உள்ளம்உனக்கு வேண்டாமடா!
விண்முட்டத் தாய்நாட்டுப் புகழ் பரப்பிடடா!
வேண்டாத செய்கைதனைச் சாகடித்துவிடு!
எண்ணித் துணிந்திடுவோம் காரியத்தில்- தம்பி
ஏற்றமிகு பாதையில் அடி வைப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்படு தமிழா!

சொந்த நாட்டில் அடிமை வாழ்வா?
எந்த நாட்டில் இம்முறை உண்டு காண்!
பைந்தமிழ் அன்னையைப் போற்றுவோமடா!
இந்நிமிடம் புறப்படு இனியென்ன பொறுமை?

அறிவை இழந்த பரம்பரையில்லை - அறிவில்
சிறந்த பரம்பரை என்று காட்டிடுவோம்
குறைந்தவரல்ல அறிவினிலே தரப்படுத்தலேனோ?
அறிந்தும் வாயடைத்திருப்பதேன் புறப்படு!

ஆண்ட பரம்பரை தமிழர் பரம்பரை - இருந்தும்
கொண்டு வந்தனர் சட்டதிட்டங்கள் இன்று
ஆண்ட பரம்பரை அடிமையாவதா? - இல்லை
ஆண்டு காட்டுவோம் விழித்தெழு தமிழா!

கொடியோர் தந்த சட்டதிட்டங்களால்
மடியாத துன்பங்கள் ஏராளம் எமக்கு
விடியாத இந்நிலை போக்கி - ஒளிரும்
சுடராக மாற்றுவோம் புறப்படு தமிழா!

வீரர் பரம்பரை நாமடா! - இனி
சோரர் போல் ஒளிந்திருப்ப தேனடா!
பார்சிறக்க நல்வாழ்வு நாம் பெற்றிட
கார் முகில் போற் திரண்டு சூழ்ந்தெழு!

மறப் பெண் குலம் வாழ்ந்த தமிழடா!
உறக்க மெப்படி வருமடா! - தம்பி
இறக்க ஏற்றம் ஏனடா! தாய்நாட்டில்
வீறுடன் எழுவாய் விடிவு காண!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமதுரிமை மீட்போம்

ஐயகோ! எமது அவலக்குரல் கேளீரோ?
அநியாயம் தமிழர்க்கு அடுக்கடுக்காய்ப் பலசேதம்
தீராதோ எங்கள் துயர் தீக்குழம்பாய்க் கொதிக்கிறதே
தான்தோன்றித் தனத்தாலே தமிழர்குலம் மண்ணாகுதே
ஐம்பத்தெட்டில் முதற்கலக்கம் நம்நாட்டினிலே
அதைத் தொடர்ந்து எழுபத்தேழில் பெருங்கலகம்
எண்பத்துமூன்றிற் பெருஞ்சேதங்கள் அம்மாடி!
எஞ்சிய கலக்கங்கள் நடைமுறையில் படிமுறையாக

வடஈழம் தீக்கோலம் உயிருடன் வாட்டுதடா!
வெறியர்களின் அட்டகாசம் யாழ்நகரினிலே
தென்னீழம் மணக்கோலம் வடஈழம் பிணக்கோலம்
தரைமட்டம் ஆனதடா! தமிழீழம் புகைக்கோலம்
சாம்பரொடு சாம்பரடா! நூல்நிலையச் சொத்துக்கள்
சந்தைக் கடைகளொடு பல இல்லிடமும் தீயின் நாக்கினிலே
தீ விழுங்கியது நூலகமல்ல தமிழர் கல்வி கலையே.
தரையில் ஓடிய இரத்தவெள்ளம் தமிழ் வேட்கையாகும்

அழிவு தமிழனுக்குத் தந்த பாடம் ஆவேசக் கொந்தளிப்பு
ஆறாத நோயாகப் பரவுகிறது தமிழீழத் தாகம்
பதைக்கிறது தமிழினம் பாதி உயிர்களோடு
பகலிரவாய் ஏக்கம் பட்டினியால் வாட்டம்
தினமொரு கொலையால் வீட்டுக்குவீடு சாக்குரல்
தின்றுவிட்ட களைப்பால் தென்பக்கம் கொட்டாவி
ஆள்கின்ற பேரினவாதத்தின் துப்பாக்கிப் பிரயோகம்
அழிந்துவிட்ட உதிரமதில் உருவெடுக்கும் புதுவாரிசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கர வாதமென்று பட்டப்பகலிற் சூடு
பாலர் முதல் கர்ப்பிணிப் பெண்வரைக்கும் சூடு
இத்தனையும் செய்துவிட்டால் தமிழர் வேட்கை
இறந்துவிடும் என்பதா? ஏற்றம் பெறும் என்பதே
ஆட்சி வர்க்கத்தினரின் அட்டகாசப் பயிற்சி வடக்கே
இஷ்டமுடன் நடந்தால் கேட்க ஆளில்லையோ?
பேரினவாதத்தின் பேரினக் கொள்கையாலே
பூண்டோடு அழிந்தொழியுமோ தமிழ்க்குலம்?

சனநாயகம் என்ற போர்வையில் சதிசெய்யும்
சர்வாதிகாரப் போக்கு நடைமுறையாட்சியிலே
நோயாளி ஒருவரைக் காத்திட வைத்தியரின் துடிப்பு
நிமிடம் ஒருகொலை செய்யச் சிங்களப்படையின் துடிப்பு
நாட்கள் மாதங்களாக நாசக்காரரின் ஆக்கிரமிப்பு
நாதியற்ற உயிர்க்குலமாய் தமிழினம் தவிக்குதையா!
அகிலமதில் இறப்பு வயோதிபத்தில் மனிதனுக்கு
ஈழத் தமிழனுக்கோ இறப்பு வாலிபத்தில்

அடிமேல் அடியடிக்க அம்மிகூட நகர்ந்துவிடும்
அதிரடிப் படையாலே தமிழன்தாகம் ஓரடி உயரும்
அழிவு கண்டது தமிழ்த் தாயகமே
இனியும் இது தொடர்வது படு பாதகமே
தமிழ்த்தலைமைகளே! தாங்குமா உம்மிதயம்?
திமிர் பிடித்த வெறிநாய்களைத் திணறடிக்க முடியாதா?
கூட்டணியாய்ப் பேசிய பேச்சுவார்த்தை போதும்
வட்டமேசை மகாநாட்டில் வளர்த்த உறவு போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிம்சைப் போராட்டத்தில் அமைதியில்லை
எமன் எமையழைத்தாலும் எமதுரிமை கோருவோம்
நேரமொரு பாராளுமன்றச் சட்டம் தம் நலனுக்காக
நினைப்பில்லை சிறுபான்மையினம் உண்டென்று
அடிமையாக்கிட எண்ணிடும் மோகம் - சம
அந்தஸ்து வழங்கிட மறுத்திடும் துரோகம்
பாதியுரிமை கேட்கவைத்தது அவர்தம் செய்கையடா!
பாசாங்குப் பேச்சுக்களால் மதிமயங்கியிருந்தோம்

ஆதியில் ஆண்ட இனம் அடிமையாவதா?
ஏது துயர் வரினும் எமதுரிமையை மீட்போம்
மக்கள் புரட்சி இது மகத்தான ஆயுதம்
மக்கள் கிளர்ச்சி இது முடிவற்ற போராட்டம்
மக்கள் கொந்தளிப்பு மறைவற்ற போர்க்கருவி
மக்கள் விழிப்புணர்ச்சி வீறுகொண்ட வேற்படை
முழங்கட்டும் எத்திக்கும் போர்ச்சங்கு
மேகங்கள் அதிரட்டும் விடுதலைக் கோஷத்தால்

கொட்டட்டும் போர்முரசு பறந்திடுக வெற்றிக்கொடி!
கொட்டங்கள் அடங்கட்டும் கொடுங்கோன்மை ஒழிக!
தனியொருவனுக்கு உணவில்லையெனில் - இந்த
ஜகத்தினை முடித்திடுவோம் என்றான் பாரதி
தனியொரு தமிழனுக்கு வதிவிடம் இல்லையெனில்
சுதந்திரதாகக் கவி என்ன செய்வானோ?
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்தும் அச்சமென்பதில்லையே
சாந்தியில்லை இது தொடரும் என்பதில்லையே-சிலர்
சாவினிலே இவ்வேட்கை தணியும் என்பதுண்மையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் பொருள்

அன்று காதலைப் பாடினார் வீரத்தைப் பாடினார்
ஆகும்போது போரையும் எழுத்திலாக்கினார்
அன்றைய தமிழன்நிலை அதுவேய ன்றோ
ஆனால் இன்றோ அதன் பொருள் வேறே
நன்றே உணரவேண்டும் நானிலமதனிலே
நிகழ் சம்பவங்கள் பல இலக்கியப் பொருளாக
ஒன்றிவிடுமே ஆக்கியோருடன் வழமையிதுவே
உலகம் ஏற்றிட்ட உண்மையுமிதுவே

நம்தமிழீழத்தில் இன்றிலக்கியம் படைக்க
நமக்கு காதல் வருமா? வர்ணனை வருமா?
தம்மனக் கிடக்கைகள் தெளிந்த நீர்போலோடும்
தான் யாத்த இலக்கிய வகையறாக்களிலே
அம்மணங்களாக அனாதைகளாக இறந்தும் - உடமை
அழிந்திட்ட கோரச் சம்பவங்களும்
நிம்மதியற்று உரிமை கோரிடும் போராட்டமும்
நிலைக்கும் இலக்கியப் பொருளாயிற்றின்று.

இலக்கியமின்று ஈழத்திலே உதிக்குமா? - அப்படி
உதிப்பின் வறட்டிலக்கியம் என்றே
இலக்கணம் தெரிந்தோர் நவில்வர் தெளிவுற
இன்று ஈழத்திலக்கியப் பொருளென
கலக்கம் நிறைபோர் இந்தியனாமி கொலைகள் - பங்கர்
காவியமாக்கமுடியுமா? இவை கற்பனையாகுமா?
சிலரின்று படைக்கும் இலக்கியப்பொருள்
சுய விடுதலைவேட்கையும் நிகழ்வுகளுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிப் பனி வீதிகளில்

வெள்ளிப்பனி வீதிகளின் மீதுலாவுவோம் - இங்கு
வேண்டியமாதிரி வாழாதிருப்போம்
பள்ளி கொள்வதையே வாழ்வெனக் கொள்ளாமல்
பற்றுடனே தாயகத்துப் பெயர் சொல்லுவோம்

சிங்களத்தீவு என்ற பெயரினை எதிர்ப்போம்
சேதமுற்ற நாட்டினையே திருத்தியமைப்போம்
எங்கள் நாட்டு வளத்தைப் பேணிக்காத்து
ஏற்றமிகு வாழ்வுக்கு வழி சமைப்போம்

எட்டுத்திசையும் சென்று வாழ்கின்ற தமிழர்
எண்ணிப் பார்த்து உணர்ந்து கொள்வோம்
பட்டு நொந்த நம்மினத்து நிலைமைக்குப்
பரிகாரம் தேட முயன்றிடுவோம்

யாழ்குடா நாட்டு நீர்ப் பரப்பினிலே - படகு
செலுத்தி வலைவீசி மீன் பிடிப்போம்
ஆழ்கடல் தன்னில் ஏலேலோ பாட்டிசைத்து
அன்றாடம் உணவுக்கு உழைத்திடுவோம்

ஒற்றுமையே உயிர்நாடி என்றுணர்ந்து
ஒருமித்துக் கூடி வாழ்ந்திடுவோம்
வேற்றுமைகள் நமக்குள் இனியும் ஏனோ?
வேண்டாத கொள்கைகளைச் சாகடிப்போம்

நன்றே எமக்கு தாயகம் ஒன்று மலரும்
நம்மினத்தின் நாமம் அங்கே பரிணமிக்கும்
இன்றே எமது நிலை உணர்த்துவோம் -தோழர்களே!
உரிமையுடன் தாயகத்தில் மிதித்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடர் நாம் வாழ்வது அற்பகாலமே
மாறுபட்டு பேதங்கள் எமக்கேனோ?
கோனென ஆண்டோரும் குடிசையில் வாழ்ந்தோரும்
கூடிச் சங்கமிப்பர் சுடுகாட்டுப் பூமியிலே

## தமிழ்மலரே!

மலரே! இனிய தமிழ் மலரே! - உம்
நீர்மையை எவர்தான் அறிவாரோ?
நீர் உலகெங்கும் பரவி மணம் பரப்பினீர்!
சொன்னீர் பற்பல தத்துவம் அன்றே

எண்ணீர் ! முச்சங்கத்தில் வளர்ந்ததை
பன்னீர்மையொடு பாவலர் மடியிற் தவழ்ந்ததை
வெந்நீர் என வெதும்பாதீர் - இன்று
பன்னீர்மையுள்ள நம்சிறார் பலரும்மை
யார் நீர் எனக் கேட்க வாடினீரோ?

எண்ணீர்! உமது எதிர்காலம் எப்படி?
காணீர் புதுயுகம் மணங்கமழ் தமிழே!
சொன்னீர்மை தவறாத என்னீர்மையன்றோ!
என நீர் மகிழ்வீர் விரைவினிலே
பேணீர்! பேணீரெனத் தமிழார்வலர் - உம்மை
தேனினுமினிய கன்னித்தமிழெனப் போற்றி
தொன்மை வாய்ந்த தமிழ்மலரான - உம்
மணத்தினை முகர்ந்து மகிழ்வரே
துயரே இனி உமக்கென்றும் இல்லை
துடைப்பர் நம்மிளைஞர் உன் கண்ணீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்சாகுமோ?

வீடுவிட்டு வீடுமாறி நாடுவிட்டு நாடுமாறி பறக்க
விட்டனரே காற்றில் தமிழ்மணத்தை நம்மிற்சிலர்
இனியொரு புது வாழ்வு தமிழுக்கில்லையா?
இன்றோடு தமிழ் அழியும் என்ற நிலை வருமா?
மன்னுபுகழ் தமிழ்க்குலம் சிதறியிங்கே
அன்னிய மொழியைத் தலையில் வைத்து
அன்னையை மறப்பது போற் தமிழை மறந்து
ஆடம்பரத்தில் திளைப்போர்க்கு முடிவு விரைவில்

செங்குருதி ஆறாகப் பாயும் போது - தாயகத்தில்
சிதைந்த உடல் மிதந்நங்கே ஓடும்போதில்
உரிமைத்தீ தணலாக எரியும் வேளை - இங்கே
கூத்தடித்துக் குடியைக் கையிலேந்தி
காதைக் கிழிக்கும்படி இங்கிலீசுப் பாடல் கேட்டு
குறட்டை விடும் சில தமிழ் மகனே! - நாட்டுக்
கொடுமைதனை எண்ணாது தூங்குகிறாயே!

வந்த தமிழன் இந்த மண்ணில் வேறாக மாறி
வளர்ந்து வந்த தன் சம்பிரதாயத்தைச் சாகடித்து
இனத்தவரை மதித்து தானுயர நினைத்து
இழித்துரைத்து இந்நாடே சொந்தமென எண்ணி
தலைகால் மாறி தலையாலே நடக்கும் போது
தங்கம் தான் பித்தளையாகக் கறுக்காதோ?
பூசையில் கரடி புகுந்த கதையும் மெய்தானோ?

தமிழனுக்கு வெட்கமிலலை நாணமில்லை
தன்முன்னோர் வகுத்தவழி நினைவுமில்லை
தமிழ்மொழியை அமிழ்தென்பார் - அடுத்தவேளை
தடக்கி இங்கிலீஸ் பேசுவதில் இன்பம் காண்பார்
வல்லினமும் மெல்லினமும் மறைந்து போகும்
நல்லினத்து வார்த்தையில் கலப்புச் சேரும்
மெல்லத் தமிழ் இனிச் சாகுமோ? - இந்த
மேற்கு நாட்டுக் கலாச்சாரங்களாலே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவிளக்கின் வெளியீடுகள்

1.சிந்திக்கத்தூண்டிய ஜேர்மன் கலாச்சாரம்
2.கவிதைச்சோலை
3.பாலர் பாடல்
4.அழிவின் சுவடுகள்(புதுக்கவிதைகள்)
5.சிந்தனைக்குரிய உருவகங்கள்( உருவகக் கதைகள்)
6.மானிடத்தின் மறுபக்கம்(கட்டுரைகள்)
7.உறவுக்குப் போராட்டம்(சிறுகதைகள்)
8.ஆதங்கம் ( புதுக்கவிதைகள்)
9.இலக்கணம் கற்போம்
10.செயலநூல். ஆண்டு - 3
11.மாணவர் கட்டுரைகள்
குறளின் நிழல்கள்

PHOTO COPIES ARE FREELY DONE BY
CARITAS
OF DORTMUND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org